கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

17-3-1974

40 காசு



குழந்தைகளைக் கேளுங்கள் — நேர்க்கியான [illegible]



எந்தக் குழந்தையையும்
கேட்டுப்
பாருங்கள்

நியூட்ரினைப்பற்றி


எந்த மிட்டாயாகத்தான்
இருக்கட்டுமே அல்லது டாப்பியாகட்டுமே—
நியூட்ரின் ஈடிணையற்றது.
காப்பி டாப்பிகள், கோகோனட் பான் பான்கள்,
லாக்டோ பான் பான்கள்,
ஆரஞ்சு காண்டிகள்,
லாக்டோ நாவல்ட்டிகள்.



nutrine

தித்திக்கத்
திகட்டாத
மிட்டாய்!

நியூட்ரின் கன்பெக்ஷனரி
கம்பெனி பிரைவேட் லிமிடெட்,
பலமனேர் ரோட்,
சித்தூர் (ஆ.பி.)



உயிர்களிடத்து அன்பு வேண்டும் — தெய்வம் உண்மையென்று தானறிதல் வேண்டும்

— பாரதியார்



கோகுலம்

மலர் 2 : இதழ் 25


மார்ச் 17, 1974

பிரமாதீச, பங்குனி 4

அட்டையில் :

காட்டுக்குள் மேயும் கரடியிது—அங்கு
காய்ந்து கிடக்குது பச்சைப்புல்லும்
நாட்டுக்குள் வந்திடப் போகுதப்போ
நல்லவர் சேர்ந்து தடுத்திடுங்கள்!

வண்ணப்படம் : ஏ. வி. பி. ஜெயராஜ்



சந்தா விவரம் :

உள் நாடு :

ஒரு வருடம் ... ரூ. 10–00

ஆறு மாதம் ... ரூ. 5–00

இலங்கை :


ஆண்டுச் சந்தா : ரூ. 15–00
(இலங்கை நாணயப்படி)

இதர நாடுகள் :

ஆண்டுச் சந்தா ரூ. 25–00

மானேஜர், கோகுலம், கல்கிப் பூங்கா, சேத்துப்பட்டு, சென்னை - 600031

பிள்ளையார் பெருமை



திருமுருக கிருபானந்தவாரியார்

வன்னி - மந்தாரத்தின் பெருமை

விநாயகப் பெருமானுக்கு அறுகைப் போல் வன்னிப் பத்திரம் மிகவும் பிரியமானது. மந்தார மலரும் பிரியமானது. அதன் காரணத்தை அடியில் கண்ட வரலாறு விளக்குகின்றது.

அளவற்ற தவம் செய்தவர் தௌமிய முனிவர். இவருடைய புதல்வன் மந்தாரன். இவன் சௌனக முனிவருக்குச் சீடனுகக் குருகுல வாசம் புரிந்து சகல கலையும் கற்றுணர்ந்தான்.

நந்தி கோத்திர முனிவருடைய புதல்வர் ஔரவர். இவருடைய மனைவி சுமேதை. இவர்கள் செய்த தவப் பயனுல் சமி என்ற புதல்வி பிறந்தாள்.


ஔரவர் தமது தவப் புதல்விக்குத் தகுந்த கணவனை நாடினுர். மந்தாரனே சிறந்த வரன் என்று கருதினுர். சமிக்கும் மந்தாரனுக்கும் வேத விதிப் படி திருமணம் நிகழ்ந்தது.

திருமணம் முடிந்த பின் மந்தாரனும் சமியும் மணக் கோலத்துடன் திரும்பித் தங்கள் உறைவிடத்துக்குப் போகின்ற வழியில் விநாயக சொரூபம் பெற்ற புருசுண்டி முனிவர் வந்தார். அவர் அளவில்லாத தவ வலிமை உடையவர். மந்தாரனும் சமியும் அவரை வணங்கவில்லை. அவருடைய திருமுகத்தில் உள்ள தும்பிக்கையைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தார்கள்.


புருசுண்டிமுனிவர் சீற்றம் அடைந்தார். ''அறிவில்லாதவர்களே! நான் விநாயகருடைய திருவுருவைப் பெற்றவன் என்று உணராமல் இளமைச் செருக்கால் என்னைக் கண்டு எள்ளி நகையாடினீர்கள். அதனுல் மரங்களாகக் கடவீர்கள்'' என்று சாபமிட்டார்.

இருவரும் நடுநடுங்கி அவருடைய திருவடியில் வீழ்ந்து, கண்ணீர் வடித்து உள்ளம் துடித்து வணங்கினுர்கள். ''தபோதனரே! சிறியேங்கள் அறியாமையால் தேவருக்குப் பிழை செய்து விட்டோம். சிறியோர் பிழையைப் பெரியோர் பொறுத்தருளுவது அருட் பண்பு. எம்மைக் காத்தருள வேண்டும்'' என்று அழுது தொழுது வேண்டிக்கொண்டார்கள்.

புருசுண்டி முனிவர் சிறிது கருணை கொண்டு, கடல் திடலாக ஆனுலும் என் சொல் மாருது. ஆயினும் உங்களுக்கு அருள் புரிகின்றேன். விநாயகப் பெருமான் மர வடிவான உங்கள் நிழலில் எழுந்தருளுவார். உலகம்







உள்ளவரை கணபதியையும் உங்களையும் மக்கள் வணங்குவார்கள். நீங்கள் மரமாக இருந்தே வீடு பேற்றை அடைவீர்கள்; வருந்தற்க'' என்று வாழ்த்தி விட்டுச் சென்றார். மந்தாரன் மந்தார மரமாகவும் சமி வன்னி மரமாகவும் ஆனார்கள்.

சமியினுடைய தாய் தந்தையர்களாகிய ஔரவரும் சுமேதையும் தங்கள் மகளைக் காணாது தேடினார்கள். சௌனகரும் தம் மாணாக்கனைத் தேடினார். மந்தாரனுடைய தந்தை தௌமியரும் மைந்தனைக் காணாது தேடினார். தேடித் தேடி அலைந்து பின்னர் ஞான விழியால் நடந்ததை உணர்ந்தார்கள். உள்ளம் வருந்தினார்கள்.

சௌனக முனிவர் வன்னி—மந்தார மரங்களின் அடியில் விநாயகரை நோக்கிப் பன்னிரு ஆண்டுகள் தவம் புரிந்தார். கணேசப் பெருமான் கருணையுடன் காட்சி தந்தார். சௌனகர் விநாயக மூர்த்தியின் பாத தாமரைகளின் மீது வீழ்ந்து வணங்கி, ''என் மாணவனாகிய மந்தாரனும், அவன் மனைவியாகிய சமியும் தங்களின் அடியவராகிய புருசுண்டி முனிவருடைய சாபத்தால் மரங்களாக ஆனார்கள். அவர் சாபத்தையும் பாபத்தையும் இவர்களுக்குத் தீர்த்தருள வேண்டும்'' என்று வேண்டினார்.

விநாயகப் பெருமான், ''சௌனக! நாம் இட்ட சாபம் நம்மாலும் நம் அடியார்களாலும் தீரும்; நம் அடியார்கள் இட்ட சாபத்தை நம்மால் தீர்க்க இயலாது. ஆதலால் இவ்விருவரும் வன்னி மரமாகவும் மந்தார மரமாகவும் இருந்து கொண்டே முக்திப் பேற்றைப் பெறுவார்கள். நாம் இம்மரங்களின் நிழலில் என்றும் எழுந்தருளி இருப்போம். வன்னி மரத்தையும் மந்தார மரத்தையும் அம்மரங்களின் அடியில் வீற்றிருக்கும் எம்மையும் வழிபடுவோர் சகல இடர்களினின்றும் நீங்கி, விருப்பங்கள் அனைத்தையும் பெறுவார்கள். வன்னி இலைகளாலும் மந்தார மலர்களாலும் எம்மை அர்ச்சிப்போர் எட்டுச் சித்திகளையும் இஷ்ட காமியங்களையும் எளிதில் பெறுவார்கள்'' என்று வரமளித்து அம்மரங்களின் அடியில் விநாயகர் எழுந்தருளினார்.

ஔரவர் தமது புதல்வி மீதிருந்த அன்பால் சமி என்ற வன்னி மரத்தின் கருப்பத்தில் புகுந்து விண்ணுலகம் எய்தி, தேவர்களுக்குத் தேவருணவை வாங்கித் தரும் தொழிலில் இருந்தார். அதனால் ஔரவரை ''சமீகர்ப்பர்'' என்று ஆன்றோர்கள் அழைக்கலாயினர்.

வன்னி மரமாகவும் மந்தார மரமாகவும் இருந்தே அவ்விருவரும் கற்பாந்த காலத்தில் விநாயகருடைய வீடு பேற்றைப் பெற்றார்கள்.

அதுமுதல் அடியார்கள் இதுகாறும் வன்னி இலையாலும், மந்தார மலராலும் விநாயக மூர்த்தியை வழிபட்டு இகபர சித்திகளைப் பெறுவார்களாயினார்கள்.

அது முதல் அறுகில்லாத குறையை வன்னி போக்குவதாலும், வேள்வித் தீ எப்பொழுதும் வன்னியில் தங்கியிருப்பதினாலும் உலகில் உள்ள எல்லா இலைகளிலும் வன்னி இலையே உயர்ந்து விளங்குவதாயிற்று. சிவபெருமானும் வன்னி இலையைச் சூடிக் கொண்டார்.

இதனால் வன்னி உயர்வு பெற்றது.

வன்னி பத்திரத்தாலும் மந்தார மலராலும் விநாயக மூர்த்தியை வழிபட வேண்டும்.

கண்ணம்மா பொன்னம்மா புதிர்!

முன்னொரு காலத்திலே ஒரு ராஜா இருந்தார். அவர் நல்ல ரசிகர். சிரிக்கத் தெரிந்தவர். ஹாஸ்யப் பிரியர். விடுகதை, புதிர் என்றால் ரொம்ப ரொம்பப் பிடிக்கும் அவருக்கு. ஒரு நாள் ராஜா உடை அணிந்து கொண்டிருந்தார், தர்பாருக்குப் போக. அப்போது ஒரு பெரிய ஈ பறந்து வந்து அவர் மீது உட்கார்ந்தது. அதற்குத் தெரியுமா, தான் அந்த நாட்டு மன்னரின் மீது உட்கார்ந்திருக்கிறோம் என்று? அது பெரிய ஈ. சாதாரண ஈயைப் போல் இல்லாமல் அதன் உடல் பொன் வண்டினுடையதைப் போல் பளபளத்தது. ஆனாலும் அது ஈதான். ராஜா தான் விநோதப் பிரியராயிற்றே. அந்த ஈயைக் கப்பென்று தம் கைகளுக்குள் சிறைப் பிடித்துவிட்டார்.

அருகில் நின்று கொண்டிருந்தான் அடைப்பக்காரன். ராஜாவின் உடைகளை எடுத்துக் கொடுப்பவன். அவருக்கு வெற்றிலை மடித்துக் கொடுப்பான். அவரது குற்றேவல்களைக் குறிப்பறிந்து நிறைவேற்றுபவன் அடைப்பக்காரன். ''ராஜா ஓர் ஈயைப் பிடித்தார் என்றால் கேட்பதற்கு வேடிக்கையாக இருக்கும் இல்லையா? ஆனால் இந்த ஈ இந்நாட்டு மன்னரின் மீது வந்து அமர்ந்து அவரால் சிறைப் பிடிக்கப்பட்டுவிட்டதால் இது இனிமேல் சாதாரண ஈயல்ல. ராஜ மரியாதை பெற வேண்டிய தகுதி பெற்றுவிட்டது. இந்த ஈக்குத் தக்கபடி ஆகாரம் கொடுத்து இன்னும் கொழுக்க வைப்போம். ஒரு பெரிய நாய், ஆடு, காளை மாடு அளவுக்குக் கொழுத்துப் பெருக்கும்படி பண்ணுவோம். அப்படிக் கொழுத்தபின் இதைக் கொன்று இதன் தோலிலிருந்து ஒரு கஞ்சிராவைத் தயார் செய்வோம். என் மகள் கண்ணம்மா அந்தக் கஞ்சிராவைத் தட்டிக் கொண்டே நாட்டியமாடுவாள். அவள் ஆட்டம் முடிந்ததும் நான் ஒரு புதிர் போடுவேன். அவளை மணக்க வருபவன் அந்தப் புதிரை விடுவித்தால் அவனுக்கே அவள் மனைவியாகலாம். எப்படி என் திட்டம்? தமாஷாகவும் அதே சமயம் பரபரப்பூட்டும்படியும் இருக்கிறதல்லவா?'' என்று கேட்டார் அடைப்பக்காரனைப் பார்த்து.

அடைப்பக்காரன் தன் மனத்துக்குள், 'இவர் ஓர் அரைப் பைத்தியம்' என்று எண்ணிக் கொண்டாலும் வாய்விட்டு, ''ரொம்ப அற்புதமான, அபாரமான திட்டம்'' என்று பாராட்டினான். அரசர் அந்த ஈயை வளர்த்துக் கொழுக்க வைக்கும் பொறுப்பையும் அடைப்பக்காரனிடமே ஒப்படைத்தார். அதற்குப் பொன்னம்மா என்று பெயர் சூட்டவும் மறக்கவில்லை மன்னர்.

பதினைந்து நாட்களில் ராஜபோகத்தில் தனிக் கூண்டில் வளர்ந்த பொன்னம்மா ஓர் எலி அளவுக்கு வளர்ந்துவிட்டது. ஒரு மாதத்தில் எலியைத் தின்னும் பூனையின் உருவத்தை அடைந்தாள், பொன்னம்மா, இரண்டாவது மாதத்தில் பூனையை விரட்டும் நாயின் உருவத்துக்கு உப்பினாள். மூன்றாம் மாதத்தில் ஒரு கன்றுக்குட்டியின் அளவுக்கு வளர்ந்துவிட்டாள். இதற்கு மேலும் அரசரால் காத்திருக்க முடியவில்லை. பொன்னம்மாவைக் கொன்று அதன் தோலைப் பாடம் செய்தார்கள். பல தடவை இழைத்து இழைத்துப் பட்டுத் துணி போல் அதை ஆக்கினார்கள். அதைக் கொண்டு ஓர் அற்புதமான கஞ்சிரா தயாரிக்கப்பட்டது. அரசகுமாரி தட்டிக் குலுக்கி அடிக்கக் கூடியதல்லவா? தங்கத்தினால் அதன்



வாண்டு மாமா

பக்கங்களில் ஜால்ராக்கள் பொருத்தப் பட்டன. வண்ண வண்ண ரிப்பன்கள் இணைக்கப்பட்டன. நாட்டியமாடுவதில் வல்லவள் இளவரசி கண்ணம்மா. அதுவும் புதிதாகச் செய்யப்பட்ட கஞ்சிராவுடன் அவள் நடனமாடினால் அற்புதமாக இருக்கும். அவள் நாட்டிய முடிவில் கேட்க வேண்டிய புதிரையும் மன்னர் தயார் செய்துவிட்டார். அது இதுதான்:

கண்ணம்மா பொன்னம்மா
சேர்ந்து ஆடினு
கண்ணம்மா பொன்னம்மா
யாரு தெரியுமா ?
கண்ணம்மா எம்பொன்னு
பொன்னம்மாலோ இந்தக் கஞ்சிரா
பொன்னம்மா என்னமா
என்று சொன்னால் என் கண்ணம்மா
உன் கண்ணாட்டியாவாள் !

கண்ணம்மாவை மணக்கத் தேசதேசத்து ராஜகுமாரர்கள் எல்லாரும் வந்தார்கள். ராஜகுமாரி கண்ணம்மா கஞ்சிராவைக் குலுக்கித் தட்டிக் கொட்டி அற்புதமாக ஆடியதைக் கண்டு ரசித்து மகிழ்ந்தார்கள். நாட்டியமுடிவில் அரசர் தம் புதிரைக் கூறினார். கஞ்சிராவைப் பற்றி இளவரசர்களுக்குத் தெரியாதா ? ''ஆட்டுத் தோலால் ஆனது' என்றான் ஒரு ராஜகுமாரன். ''மாட்டுத் தோலால் ஆனது, மன்னா !'' என்றான் இன்னொருவன். 'மான் தோல், மன்னவா!' என்றான் வேறு ஒருவன். கண்ணம்மா கலகல வென்று சிரித்துவிட்டு மண மாலையை யார் கழுத்திலும் போடாமல் ஓடிவிட்டாள். மன்னரும் கடகடவென்று சிரித்துவிட்டு, ''எல்லோருமே தோற்றுப் போனீர்கள்!'' என்றார்.

இப்படிப் பல நாட்கள் பல ராஜகுமாரர்கள் வந்து வந்து ஏமாற்றத்துடன் திரும்பிப் போனார்கள். மன்னருக்கும் அலுத்துப் போயிற்று. 'ஆட்டுத் தோல், மாட்டுத் தோல், கரடித் தோல், காண்டாமிருகத்தின் தோல் என்று அவர்கள் கூறுவதைக் கேட்டுக் கேட்டுச் சலிப்படைந்து போன அவர், ''இனி என் புதிரை விடுவிக்க முடியாதவர்களின் தலை பறிபோகும்'' என்று அறிவித்தார். உயிர் விடத் துணிந்தவர் யார் இந்த உலகில் ? கண்ணம்மாவைக் கல்யாணம் செய்து கொள்ள ஆசைப்பட்டு வரும் அரச குமாரர்கள் வருவது நின்றது.

அந்த நாட்டின் ஒரு மூலையில் ஓர் ஆட்டிடையன் இருந்தான். நல்ல அழகன். ராஜ உடையைப் போட்டால் அரசகுமாரனைப் போலவே இருப்பான். அத்தனை கம்பீரமான தோற்றம். மன்னரின் விடுகதை விவகாரம் அவன் வரை பரவி இருந்தது. ஆசை யாருக்குத்தான் இருக்காது ? அந்த ஆட்டிடையனுக்கும் அது இருந்தது. அரச குமாரியை மணக்க விரும்பினான். தன் தம்பியிடம் ஆட்டு மந்தையைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு அரண்மனைக்குக் கிளம்பி விட்டான். அவன் அம்மா சொன்னாள், ''அப்பா மகனே உனக்கோ எழுதப் படிக்கத் தெரியாது. மன்னர் போடும் புதிரை உன்னால் எப்படி விடுவிக்க முடியும்? எத்தனையோ அறிவாளிகள் தோற்றுப்



இரு. வீண் ஆசைகளையெல்லாம் வளர்த்துக் கொள்ளாதே!'' என்று.

அந்த வாலிபன் ஒரு பிடிவாதக்காரன். ஒன்றை நினைத்துவிட்டால் பிறகு அதை முடிக்காமல் இருக்கமாட்டான். ஆகவே அவன் அம்மா வழிப் பயணத்துக்கு ரொட்டி சுட்டுக் கொடுத்து அனுப்பினாள். கிராமத்தை விட்டுக் கொஞ்ச தூரம்தான் போய் இருப்பான். ஒரு கறுப்புக் கட்டெறும்பு அவனை வழி மறித்தது. '' ஐயா, ஆட்டிடையனாரே! எனக்கும் அரண்மனையைக் காண வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. என்னையும் அழைத்துப் போ. என்னை உன் சட்டைப் பையில் போட்டுக் கொண்டால் போதும் '' என்றது.

'' சரிதான் போ! சட்டைப் பைக்குள் என் அம்மா கொடுத்த அருமையான ரொட்டி இருக்கிறது. பகல் உணவுக்குப் பக்குவமான ஆகாரம். எட்டெறும்பே! உன் காலில் ஒரே புழுதியும் அழுக்கும். உன்னை என் பைக்குள் புகவிட்டால் என் உணவின் மீதெல்லாம் ஓடி அதை நாசமாக்கி விடுவாயே!'' என்றான் இளைஞன்.

''இதோ பார். நான் என் கால்களை நன்றாகச் சுத்தம் செய்து கொண்டுவிட்டேன், போதுமா ?'' என்று கெஞ்சியது கட்டெறும்பு. ஆட்டிடையனும் அதை எடுத்துத் தன் பைக்குள் போட்டுக் கொண்டு கிளம்பினான். கொஞ்ச தூரத்தில் ஒரு கரு வண்டு பாதையின் குறுக்கே வந்தது. ''அரண்மனைக்குப் போவதாகக் கேள்விப்பட்டேன். எனக்கும் உன் பையில் இடம் கொடேன். ராஜாவைக் காண வேண்டும் என்று எனக்கு ரொம்ப நாட்களாக ஆசை'' என்றது வண்டு.

'' உன்னையா ? என்னுடனா ? என் அம்மா எனக்கு ஆசையாக ரொட்டி தயாரித்துக் கொடுத்திருக்கிறாள். அதன் மீது வண்டுகள் ஓடுவதை நான் விரும்பவில்லை'' என்றான் இளைஞன்.


'' நான் உன் உணவுப் பக்கமே போக மாட்டேன். உன் சட்டைப் பையின் ஓரத்தில் ஒட்டிக் கொள்ளுகிறேன், போதுமா?'' என்றது வண்டு. ஆட்டிடையன் அதையும் எடுத்துத் தன் பைக்குள் போட்டுக் கொண்டு பிரயாணத்தைத் தொடர்ந்தான். ஒரு வயல்காட்டின் வழியாகப் போகும்



போது, ''ஐயா! ஐயா!'' என்ற குரல் கேட்டுத் திரும்பினான். ஒரு வயல் எலி தானியக் கதிர் மீது ஏறி நின்று கொண்டு தன்னை அழைப்பதைக் கண்டவன் அதன் அருகே போனான். ''உனக்கும் அரண்மனைக்கு ஏர் ஆசையாக்கும்? என் பையில் சவாரி செய்ய விருப்பமாக்கும்?'' என்றான் இடையன்.

''அதுவே தான். கச்சிதமாகச் சொல்லி விட்டாயே'' என்று தன் உளிப் பற்கள் தெரியச் சிரித்தது எலி.

''சுண்டெலியை யாராவது உணவு மூட்டைக்குள்வைத்துக் கொண்டு போவார்களா? உன் வாசனையே என் உணவைக் கெடுத்துவிடுமே?'' என்றான் வாலிபன்.



''பகல் உணவுக்கான நேரந்தான் ஆகிவிட்டதே. உன் உணவை முடித்துக் கொள்ளேன். அதன் பிறகு என்னை உன் சட்டைப் பைக்குள் அனுமதிப்பதில் ஆட்சேபனை இருக்காதே'' என்று நயமாக நாசூக்காகச் சொல்லியது வயல் எலி. வாலிபனுக்கும் அது நியாயமாகவே தோன்றியது. ஒரு மரத்தடியில் உட்கார்ந்து தன் உணவு மூட்டையைப் பிரித்தான். கட்டெறும்புக்கும், கருவண்டுக்கும் வயல் எலிக்கும்கூடக் கொஞ்சம் கொஞ்சம் தன் உணவில் பங்கு கொடுத்து உண்டான். பிறகு வயல் எலியையும் தன் பைக்குள் போட்டுக் கொண்டு அரண்மனையை நோக்கி நடந்தான்.

கிளம்பியபோது இருந்த உத்ஸாகமும் தைரியமும் அரண்மனையை நெருங்கிய போது குறைந்துவிட்டன. ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான் சோர்ந்து போய். ''எதற்காக இங்கே உட்கார்ந்து விட்டாய்?'' என்று கேட்டன எறும்பும் வண்டும் வயல் எலியும்.

''அரண்மனையில் அரசரின் புதிருக்குத் தான் விடையளித்தாக வேண்டும். இல்லாவிட்டால் என் உயிர் பறிக்கப் படுமாம். அது அத்தனை மகிழ்ச்சியான விஷயம் இல்லையே? உயிரோடிருக்கும் காலத்தைக் கொஞ்சம் நீடித்துக் கொள்ளவும், வாழ்க்கையை இன்னும் கொஞ்சம் ரசிக்கவும்தான் இங்கு தாமதிக்கிறேன்'' என்றான் ஆட்டிடையன்.

''புதிர் என்னவாம்?''

''ராஜகுமாரியின் கையிலுள்ள கஞ்சிராவைப் பற்றியதாம். ஒலி எழுப்பும் அதன் தோல் எதனால் ஆனதென்று கூற வேண்டுமாம்.''

''கவலைப் படாதே. தைரியமாக எழுந்து போ. நாங்கள் உனக்கு உதவுகிறோம்'' என்றன இடையனின் தோழர்களான எறும்பும் வண்டும் எலியும். தோழர்கள் அளித்த உற்சாகத்தில் இளைஞன் அரண்மனைக்குப் போனான். தான் அவருடைய புதிரை விடுவிக்க வந்திருப்பதாக அரசரிடம் கூறினான். கையில் ஆட்டுக்குத் தழை பறித்துப் போடும் துரட்டியுடனும் இடையில் சுருக்குப் பையுடனும் தன் முன் நிற்கும் ஆட்டிடைய இளைஞனைக் கண்ட அரசர் ''வாலிபனே, உன்னுடைய வாழ்க்கை அரச வாழ்வை விட உயர்ந்தது; சுதந்திரமானது. பேசாமல் உன் கிராமத்துக்குத் திரும்பிப் போ'' என்றார்.

ஆனால், ஆட்டிடையன் அதிகம் படிக்கா விட்டாலும், ஏழையானாலும் பிடிவாதக்காரன். ''நான் புதிரை

விடுவிக்காமல், ராஜகுமாரியை அடையாமல் திரும்பப் போவதில்லை'' என்ருன். அதற்கு மேல் அரசரும்தான் என்ன செய்வார்? கண்ணம்மா 'ஜல் ஜல் ஜல்' என்று கஞ்சிரா ஒலிக்க நடனமாடியபடியே நடந்தாள். அரசரும் தம்முடைய புதிரைக் கூறினர்:

கண்ணம்மா பொன்னம்மா
சேர்ந்து ஆடினு
கண்ணம்மா பொன்னம்மா
யாரு தெரியுமா ?
கண்ணம்மா எம்பொண்ணு
பொன்னம்மாளோ இந்தக் கஞ்சிரா
பொன்னம்மா என்னமா என்று
சொன்னுல் என் கண்ணம்மா
உன் கண்ணுட்டி யாவாள் !

ஆட்டிடையன் கண்ணம்மாவின் கையில் இருந்த கஞ்சிராவை வாங்கி அதன் தோலை நன்கு சோதித்துப் பார்த்தான். 'வெள்ளாடு, செம்மறியாடு, மாடு இவைகளின் தோலெல்லாம் எனக்குத் தெரியும். ஆனல் இது அவைகளினுடையதல்ல...'' என்று, தனக்குள் கூறிக் கொண்டான்.

''உன்னுல் ஊகிக்கமுடியவில்லையா?'' என்றது கருவண்டு அவன் பைக்குள்ளிருந்தபடி.

''முடியவில்லையே!'' என்ருன் இளைஞன்.

''என்னை வெளியே எடுத்து விடு'' என்றது கட்டெறும்பு. ''அது எதனுல் ஆனது என்று என்னுல் கண்டு பிடிக்க முடியுமா பார்க்கிறேன்''. ஆட்டிடையன் கட்டெறும்பை எடுத்துக் கஞ்சிராவின் மீது விட்டான், அவையிலுள்ளவர்களுக்குத் தெரியாதபடி. கட்டெறும்பு கஞ்சிராவினுள் சுற்றிச் சுற்றி வந்தது. பிறகு இடையனின் காதோடு ''என்னை யாரும் ஏமாற்ற முடியாது. நான் பல ஈக்களைப் பல்வேறு உருவங்களில் பார்த்தவனுக்கும்'' என்றது கட்டெறும்பு.

''என்னப்பா, எத்தனை நேரம்? சீக்கிரம் உன் முடிவைச் சொல். இல்லாவிட்டால் கொலைக் களத்துக்குப் போ'' என்று கத்தினுர் அரசர்.

''இது ஒரு ஈயினுடைய தோல்'' என்ருன் இடையன், எறும்பு சொல்லிக் கொடுத்தபடியே.

அரசவையில் நிசப்தம் நிலவியது. அரசரின் முகம் தொங்கிப் போயிற்று. எத்தனையோ அரச குமாரர்களால் சொல்ல முடியாததை இவன் சொல்லி விட்டானே!

''நான் இந்த ஆட்டிடையனுக்கு மனைவியாக மாட்டேன்'' என்று கண்ணீர் விட்டாள் கண்ணம்மா.

''நானும் இவனுக்கு உன்னை மனைவியாக்க மாட்டேன்'' என்ருர் ராஜா.

''வெற்றி பெற்ற நானல்லவா என் முடிவைச் சொல்ல வேண்டும்?'' என்ருன் இடையன்.

''உனக்கு என்ன வேண்டுமானுலும் தருகிறேன்'' என்ருள் கண்ணம்மா.

''நீ கேட்டதை யெல்லாம் தருகிறேன் — என் மகளைத் தவிர'' என்ருர் மன்னர்.

''நான் வெகு தூரத்திலிருந்து வந்திருக்கிறேன். எனக்கு ஒரு நல்ல பெரிய மாட்டு வண்டி வேண்டும், திரும்பிப் போக'' என்ருன் இடையன்.

''கொடுத்தேன்'' என்ருர் மன்னர் மகிழ்ச்சியோடு.

''நான் என்ன பரிசு தரட்டும் உனக்கு?'' என்று கேட்டாள் இளவரசி தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே.

''உன் சுருக்குப்பை நிறையும்படி பொற்காசுகளைத் தரச்சொல்'' என்றது வயல் எலி.

இடையன் அதன்படியே கேட்டதும் இளவரசி கடகடவென்று சிரித்தபடி, ''ரொம்பச் சின்னப் பையாயிற்றே, அது போதுமா?'' என்ருள்.

அரண்மனைக் கஜானுவிலிருந்து பொற்காசுகளைக் கொண்டு வந்தனர். வயல் எலி சுருக்குப்பையின் அடியைத் தன் பற்களால் கடித்து ஒட்டை செய்தது. பொற்காசுகளைப் போடப் போட எல்லாம் இடையனின் காலடியில் விழுந்து கொண்டிருந்தன. பை நிறையவே இல்லை! மூட்டை மூட்டையாகக் கொண்டு வந்து கொட்டினுர்கள், வாக்களித்தபடி பையை நிரப்புவதற்காக. இடையன் பொற் குவியலுக்குள் மூழ்கிப்போனுன். ''போதும் இனி வேண்டாம்'' என்று பெருந்தன்மையோடு கூறினுன் இடைய இளைஞன்.

நல்ல காளைகள் பூட்டிய வில் வண்டி வந்து தயாராக நின்றது. பொற் காசுகளை மூட்டைகளாகக் கட்டி வண்டியில் ஏற்றிக் கொண்டு கிராமத்துக்குக் கிளம்பினுன் ஆட்டிடையன். கிராமத்தில் தன் மனத்துக்குப் பிடித்த ஓர் அழகிய இடைப் பெண்ணை மணந்து கொண்டான். காலை நீட்டிப் படுத்திருப்பான். மனைவி கால் பிடித்து விடுவாள். விசிறுவாள். சுகமாகக் கண்ணை மூடியபடி தூங்குவான். ஒரு கவலை கிடையாது. ஏன் கவலைப்பட வேண்டும்? ஆட்டிடையன் அரச போகத்தில் ஆனந்தமாக வாழ்ந்து வந்தான். ஆனல் தினமும் ஆடு மேய்ப்பதை மட்டும் அவன் விடவே இல்லை!

வயல் எலி


வரப்புக்குள்ளே குடியிருக்குது வயல்எலி! — அதை
வரம்புமீறி வளரவிட்டால் தலை வலி!
இரவுபார்த்து வெளியில்வந்து உலவும்! — நெல்லை
இரக்கமின்றிக் கொரித்துத் தின்று குலவும்!

உழவன் வயிற்றில் மண்ணையள்ளிப் போடும்!—நாட்டில்
உற்பத்தியைக் குறைத்துவிட்டு ஓடும்!
வழக்கம்போல வளையில்நெல்லைச் சேர்க்கும்! — திருடி
வாழ்வைவளர்க்க வழிகள்பலவும் பார்க்கும்!

தோலைவிற்கப் பாம்பைக் கொன்று போட்டோம்!—
எலிகள்
தொகையில்பெருகிப் போனதையும் கேட்டோம்!
மூலைமுடுக்கில் வயலில்எங்கும் எலிகள்! — நெல்
முதிர்ந்த வயல்கள் இன்றிவற்றின் பலிகள்!

உழைப்பில்லாமல் வயலைமொட்டை அடிக்கும்!—
திருட்டில்
ஊறி யதன் இனத்தைப்பெருக்கத் துடிக்கும்!
அழைப்பில்லாமல் வந்துசேரும் விருந்து! — இது
அற்றுத் தொலைய வைக்கவேண்டும் மருந்து!

காரைக் கலைக்குயில்



காக்கைப் பள்ளிக்கூடம்


காக்கைப் பள்ளிக் கூடமாம்
காகா என்று பாடமாம்
பார்க்கப் பார்க்க அழகுதாம்!
பாடிப் பாடிப் பழகுதாம்!

பாடிப் பழகும் இடையிலே
பாட்டி அம்மா கடையிலே
சிடை அடை வடையிலே
சென்ற(து) எண்ணம் நொடியிலே!

உடனே எல்லாம் பறந்தன
ஒன்ருய்க் கடைமுன் இருந்தன
கடனே சொல்லித் தின்றன
கையை விரித்து நின்றன!

காக்கைப் பள்ளிக் கூடம்தான்
கலைந்து போச்சுப் பாடம்தான்
ஆக நாளை வாருங்கள்
ஆகும் வேலை பாருங்கள்!

—தமிழழகன்



தோட்டத்தில் அம்மா கத்திரிக்காய் பறித்தாள். ஒரு கத்திரிச் செடியில் இலைகளுக்கு இடையே ஒரு கத்திரிக்காய் மறைந்திருந்தது. இலைகளை விலக்கி அந்தக் கத்திரிக்காயைப் பறிக்க அம்மா வலது கையைக் கொண்டு சென்றாள். தொடுவதற்கு முன்பாக அந்தக் கத்திரிக்காய் அம்மாவின் கை மீது ஜம்மென்று குதித்தது.

அம்மாவுக்கு ஒரே ஆச்சரியம்! கத்திரிக்காயை அருகில் வைத்துக்



கத்திரிக்காய் பேசியது



திருவாழத்தான்

கொண்டு பார்த்தாள். அதுக்குக் குட்டை குட்டையாக இரண்டு கைகளும் கால்களும் இருந்தன. அம்மா பார்த்துக் கொண்டிருக்கும் போதே, அந்தக் கத்திரிக்காய் கடுகு போல் இருந்த தனது இரண்டு கண்களையும் மூடி மூடித் திறந்து விழித்தது. சுண்டைக் காய் அளவுக்கு வாயைத் திறந்து அந்தக் காலை நேரத்தில் அது கொட்டாவி விட்டது. வியப்புடன் அந்தக் கத்திரிக்காயைக் கையில் வைத்து, அம்மா பார்த்துக் கொண்டிருந்தாள்.

கத்திரிக்காய் கையால் மூக்கைத் தேய்த்து விட்டுக் கொண்டது.

''பனி தாங்கல்லே! ஜலதோஷம்! மூக்கு என்னமாக் குடையுது!'' என்றது கத்திரிக்காய்.

''இந்தக் கத்திரிக்காய் பேசறதே!'' என்று ஆச்சரியத்துடன் கூவினாள் அம்மா.

''அம்மா! என்னை உள்ளே தூக்கிக் கொண்டு போயேன்! ரொம்பக் குளிருது!

அதைத் தூக்கிக் கொண்டு அம்மா வீட்டினுள்ளே சென்றாள்.

அப்போது வெளியே போய்விட்டு அப்பா வீட்டினுள் நுழைந்தார்.

கத்திரிக்காய் அம்மாவின் மடி மீது ஏறி மறைந்து கொண்டது.

''அவர் அப்பா! பயப்படாதே!'' என்று கூறி அம்மா அதைக் கையில் எடுத்துக் கொண்டாள். உடனே கிடுகிடுவென்று ஓடிப் போய், கத்திரிக்காய் அப்பாவின் வேட்டியைப் பிடித்து இழுத்தது.

அப்பா குனிந்து கீழே பார்த்தார். கத்திரிக்காயை மிகுந்த ஆச்சரியத்துடன் அவர் கண்கள் நோக்கின.

''ஏது இது?'' என்றார் அப்பா.

''தோட்டத்திலே காய் பறிக்கலாம்னு போனேன். அப்போ செடியிலிருந்து இது கை மேலே குதிச்சது'' என்றாள் அம்மா.

''நம்ம வீட்டிலே குழந்தைகளே இல்லை. இந்தக் கத்திரிக்காயை நாம் வளர்க்கலாம்!'' என்றார் அப்பா.

அந்தக் கத்திரிக்காய் வீட்டிலே விளையாடியபடி இருந்தது. ஆனால் அது வளரவே இல்லை. அம்மாவுக்கு ரொம்ப உதவி செய்தது. சின்னச் சின்னத் தட்டுக்கள், ஸ்பூன்கள் இவைகளைப் பளபளவென்று விளக்கிக் கொடுக்கும். சிறு விளக்குமாறு ஒன்றைப் பண்ணிக் கொடுத்தாள் அம்மா. அதைக் கொண்டு கத்திரிக்காய் வீடு முழுதும் பெருக்கும். சின்ன டம்ளரில் நீரை எடுத்துத் தெளித்து வீட்டை மெழுகும். இரண்டு கைகளாலும் காப்பி டம்ளரைப் பிடித்துத் தூக்கிக் கொண்டு போய் அப்பாவிடம் கொடுக்கும். அம்மாவுக்கு உதவியாகத் தோட்டத்தில் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றும். புற்களையும், வேண்டாத செடிகளையும் பிடுங்கி, அள்ளிக் கொண்டு போய் வேலி ஓரமாகப் போடும்.

அம்மா கத்திரிக்காய்க்குப் பாடம் சொல்லிக் கொடுத்தாள். அது பாடங்களை நன்றாகக் கற்றுக் கொண்டது. சிலேட்டை அதனால் தூக்க முடியவில்லை. தரையில் சிலேட்டை வைத்து அதன்மீது நடந்தபடி குனிந்து எழுதும்.



புஸ்தகங்கள் மீது ஓடிக் கொண்டு படிக்கும்.

ஒரு நாள் வழக்கமாகக் காய் விற்பவள் வரவில்லை. அதனால் அம்மா, அப்பாவிடம் வீட்டைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, காய்கறிகள் வாங்கி வரக் கடை வீதிக்கு நடந்தாள்.

கத்திரிக்காயும் அம்மாவின் பின்னாலேயே சென்றது. அம்மாவின் சேலை அடிப் பாகத்தைப் பிடித்துக் கொண்டு, அம்மாவின் நடைக்குச் சரியாக அது ஓடியதால், தெரு நாய்கள்கூட அதைக் கவனிக்கவில்லை. சாலையில் செல்லும் பஸ்களையும், லாரிகளையும் பார்த்த போது அதுக்குப் பயமாக இருந்தது. ''எதுக்காக இந்தப் பெரிய பெரிய வீடுகள் சக்கரங்களின் மேலே உட்கார்ந்து கொண்டு, இத்தனை வேகமாக ஓடுகின்றன?'' என்று கத்திரிக்காய் தன்னையே கேட்டுக் கொண்டது. வீடு திரும்பியதும் அப்பாவிடம் கேட்க வேண்டும் என்று எண்ணியது.

வீதியில் கறிகாய்க்காரன் ஒருவன் கடை விரித்திருந்தான். அக்கடைக்கு முன்னால் அம்மா நின்றாள். அங்கே உருளைக் கிழங்கு, கத்திரிக்காய், வாழைக்காய், தக்காளி, பச்சை மிளகாய், கறிவேப்பிலை யாவும் குவியல் குவியலாக இருந்தன. அம்மா குனிந்து, தக்காளியைப் பார்த்து விட்டு, கடைக்காரனிடம் விலை பேசினாள்.

கத்திரிக்காய் அம்மாவின் சேலையை விட்டுவிட்டு, அந்தக் காய்க் குவியல் இடையே புகுந்தது. உருளைக் கிழங்குக் குவியல் மீது ஏறியது.

கடைக்காரன் தற்செயலாக அந்தப் பக்கம் பார்த்தான். உருளைக் கிழங்கோடு கத்திரிக்காய் கலந்துவிட்டதாக எண்ணி, அந்தக் கத்திரிக்காயை எடுத்து, கத்திரிக் காய்க் குவியலின்மீது வைத்து, குவியலை ஒருமுறை கையால் தள்ளிவிட்டு, ஒழுங்கு படுத்தினான். இந்தக் கத்திரிக்காய் குவியலாக இருந்த கத்திரிக்காய்களுக்கு இடையே அகப்பட்டுக் கொண்டது.

அதுக்கு மூச்சு முட்டியது. திணறித் திணறி அசைந்தது. குவியல் விலகுவ



தாக இல்லை. மேலே அத்தனை கத்திரிக்காய்களும் அழுத்தின. அதுக்கு மயக்கம் வந்தது.

சில்லென்று காற்று வீச, ஒளி கண்கள் மீது படவும், கத்திரிக்காய் கண்களைத் திறந்தது. கடைக்காரன் மற்றக் கத்திரிக்காய்களோடு, இந்தக் கத்திரிக்காயையும் சேர்த்துத் தராசில் நிறுத்தான்.

தராசில் இருந்தபடி கத்திரிக்காய் சுற்றுமுற்றும் பார்த்தது. அம்மாவைக் காணவில்லை. அதுக்கு அழுகை அழுகையாக வந்தது.

கடைக்காரன் ஒரு பெரிய கூடையினுள் தராசுத் தட்டைக் கவிழ்த்தான். தொப்பென்று கூடையினுள் விழுந்த கத்திரிக்காய் ஓடிப் போய் ஒரு பக்கமாக நின்று கொண்டது.

அதன்பின் கடைக்காரன் உருளைக் கிழங்குகளை நிறுத்துப் போட்டான். உருளைக் கிழங்குகள் தன் மீது மோதாமல் இருக்கக் கத்திரிக்காய் ஒதுங்கிக் கொண்டது. தக்காளிகள் வந்து விழுந்தன. கறிவேப்பிலை, கொத்து மல்லித் தழைகள் அதன் மேல் மழை போலக் கொட்டின.

துள்ளித் துள்ளி எழுந்து கத்திரிக்காய்க் கூடையில் எல்லாக் காய்களுக்கும் மேலாக நின்றது. நிமிர்ந்து பார்த்தது. அதற்கு வியப்புத் தாங்க முடியவில்லை. வழக்கமாகக் கறிகாய்கள் கொடுக்கும் கூடைக்காரி அருகில் நின்றிருந்தாள்.

கத்திரிக்காய் அந்தக் கூடையில் ஓர் ஓரமாக உட்கார்ந்து கொண்டது.

கறிகாய்க்காரி கூடையைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு நடந்தாள்.

'' கத்திரிக்காய், வாழைக்காய் உருளைக் கிழங்கு, தக்காளி!'' என்று கூவினாள் அவள்.

இப்படியே கூவிக் கொண்டு தெருத் தெருவாக நடந்தாள் கறிகாய்க்காரி. எந்த வீட்டிலிருந்தாவது யாராவது கூப்பிட்டால், அந்த வீட்டில் கூடையை இறக்கி, பேரம் பேசிக் காய்கறிகளை அவள் விற்றாள். அவள் கைகளிலும், கண்களிலும் படாமல் கத்திரிக்காய் ஓர் ஓரமாகக் கூடையினுள் ஒளிந்து கொண்டது.

தன்னுடைய வீடு வந்ததும், கறிகாய்க் கூடைக்காரி கூடையை இறக்குவாள் என்று எதிர்பார்த்தது கத்திரிக்காய். ஆனால் அவள் இறக்கவில்லை. வீட்டு வாசலில் நின்றபடி, ''அம்மா! காய்கறி வேணுமா ?'' என்று கேட்டாள்.

''வேணாம் போ. நீ வர இத்தனை நாழி ஆயிடுத்தேன்னு, நானே கடை வீதிக்குப் போய் வாங்கிண்டு வந்துட்டேன்'' என்றாள் அம்மா.

கத்திரிக்காய்க்கு அம்மாவின் பதிலைக் கேட்டதும் பயமாகப் போய்விட்டது. அது உடனடியாக ஏதாவது செய்யாவிட்டால், கூடைக்காரி கூடையோடு அதையும் தூக்கிக் கொண்டு போய்விடுவாள். எந்த வீட்டிலாவது கத்திரிக்காயோடு கத்திரிக்காயாக அதையும் நிறுத்து விலைக்குப் போட்டுவிடுவாள். அப்புறம் வீடு திரும்புவது என்பது நினைத்துப் பார்க்க முடியாத செயல்.

'' அப்போ நாளைக்கு வரேன், அம்மா !'' என்று கூறிக் கொண்டே திரும்பினாள் கூடைக்காரி.

அச்சமயம் கத்திரிக்காய் கூடை மீது, சுவரில் ஏறுவது போல் ஏறியது. கூடையின் விளிம்பில் இருந்து கூடைக்காரியின் தோள் மீது தொப்பென்று குதித்தது.

கூடைக்காரி பயந்து போனாள். ''ஐயையோ, எதுவோ மேலே குதிக்குதே !'' என்று கூறியபடி, கூடையைப் பிடித்திருந்த கையை எடுத்தபடி துள்ளிக் குதித்தாள். அவளது தலையிலிருந்த கூடை விழுந்து, நிலத்தில் காய்கறிகள் அனைத்தும் சிதறின.

கூடைக்காரியின் தோளில் குதித்த கத்திரிக்காய், அவளது சேலையைப் பிடித்துக் கொண்டு வெகுவேகமாக அவளது முதுகுப்புறமாக இறங்கித் தரையில் குதித்தது. ஓடிப் போய் வாயிற்படிகளில் தாவி ஏறி, வீட்டினுள் புகுந்தது.

'' அம்மா !'' -என்று கூவியபடி கத்திரிக்காய் உள்ளே ஓடியது.

அம்மா உள்ளே இருந்து ஓடி வந்தாள். அப்பாவும் கூடவே வந்தார்.

'' எங்கேடி இத்தனை நேரம் போயிருந்தே ? உன்னைக் காணோம்னு வீடு முழுதும் தேடறோம் ! எங்கே போனே?'' என்று கேட்டுக்கொண்டே வந்து அம்மா கத்திரிக்காயைத் தூக்கிக் கொண்டாள்.

அப்பா அருகில் வந்து அதைத் தட்டிக் கொடுத்தார்.

கத்திரிக்காய், தான் அம்மாவுடன் கடை வீதிக்குச் சென்றதையும், அங்கு தான் காணமல் போய்விட்டதையும், கறிகாய்க் கூடைக்காரிக்குத் தெரியாமல் அவளுடன் கூடையில் திரும்பியதையும் அது சொல்லக் கேட்டு, அதிசயத்துடன் அம்மாவும் அப்பாவும் தங்களது மூக்கின் மீது விரலை வைத்தனர்.

'' இனிமேல் இப்படி யெல்லாம் போகாதேடி கண்ணு!'' என்று அம்மாவும், அப்பாவும் கத்திரிக்காயிடம் கூறினர்.

கதை முடிந்தது. கத்திரிக்காயும் விளையாட ஓடியது.



பொம்மைகள் நூலகம்

'**நூ**லகம்' என்றால் நூல்களைச் சேகரித்து, நம்மவர்களுக்கு வழங்கி வரும் பொது நூலகங்களே நம் கண் முன்னர் தோன்றும். ஆனால் புத்தகங்களுக்குப் பதிலாகப் பொம்மைகளைச் சேகரித்து, உங்களுக்கு வழங்கி வரும் **பொம்மைகள் நூலகம்** என்பது ஒரு விந்தையே!

ஒவ்வொரு வீட்டிலும் உள்ள குழந்தைகளுக்கு, அவர்கள் விரும்பும் விளையாட்டுப் பொம்மைகளை ஒவ்வொருவருக்கும் வாங்கிக் கொடுப்பது என்பது எத்தனை பணம் நிறைந்தவர்களானாலும் முடியாது; ஆனால் அந்தக் குறையினைப் 'பொம்மைகள் நூலகம்' நீக்கிவிடுகின்றது. மேலும் வாரம் ஒரு புதிய பொம்மையினைப் பெற்று, வைத்து விளையாடும் வாய்ப்பினையும் வழங்குகின்றது.

ஆசியாவிலேயே முதன்மையான இந்த நூலகம், குழந்தைகளின் மனத்தில் என்றும் நீங்காத இடம் பெற்ற நேரு மாமாவின் நினைவாகச் '**சாச்சா நேரு பொம்மைகள் நூலகம்**' என்று அழைக்கப்படுகிறது.

இந்த மாதிரி பொம்மைகள் நூலகத்தின் பிறப்பிடம் டென்மார்க் ஆகும். அங்கு இதுபோல் மிக அதிகமான நூலகங்கள் உள்ளன.

இந்த நூலகத்தில் பதினைந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனைவரும் உறுப்பினராகலாம். பொம்மைகளை வீட்டுக்கு எடுத்துச் சென்று விளையாடிவிட்டுத் திருப்பிக் கொடுத்துவிட்டு, வேறு ஒரு புதிய பொம்மையை ஒரு வாரத்துக்குக் கடனாகப் பெற்றுச் செல்லலாம்.

1965ஆம் ஆண்டு இந்த மாதிரியான நூலகம் தில்லியில் தொடங்கப்பெற்றது. பம்பாயிலும் இது போன்ற ஒரு நூலகம் இருக்கின்றது.

பொம்மைகளை நன்றாக வைத்துத் திருப்பிக் கொடுக்கும் குழந்தையின் உறுப்பினர் அட்டையில் நம் மனத்தில் என்றும் நீங்காத இடம் பெற்ற நேரு மாமா அணியும் ஒரு ரோஜா மலர் பொறிக்கப்படுகிறது. ஒரு குழந்தை இது போல் எட்டு மலரைப் பெற்றால், அந்தக் குழந்தைக்கு ஒரு பொம்மை பரிசாக வழங்கப்படுகிறது.


குழந்தைகள் தங்களுக்கு விருப்பமான பொம்மைகளைத் தேர்ந்தெடுக்கலாம். ஆனால் பொம்மைகள் நன்றாகப் பாதுகாக்கப்படாமல் திருப்பிக் கொடுத்தால், அதனையும் நூலகர் அவருடைய அட்டையில் பதிவு செய்கிறார். இவ்வாறு இரு முறை குறிக்கப்படுமானால், அந்தக் குழந்தை, உறுப்பினர் பதவியை இழந்துவிடுகிறது.

இப்பொழுது இங்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொம்மைகள் இருக்கின்றன. இந்த நூலகத்தில் இருநூற்றுக்கும் மேல் குழந்தை உறுப்பினர்கள் இருக்கின்றனர். — **இராம. சுப்பிரமணியன்**



கனவு பலித்தது

பொன்மலை பரிமளம்



ரவியும் மோகனும் ஒரே பள்ளியில் படிப்பவர்கள். பள்ளியில் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளில் இருவருமே கலந்து கொள்வார்கள். எப்பொழுதும் அவர்கள் இருவருக்கும் தான் கடுமையான போட்டி நடக்கும். ஒருவரை யொருவர் முந்திக் கொண்டு வெற்றி பெறுவதில் இருவரும் மிகவும் குறியாக இருப்பார்கள். போட்டியின் இறுதி நாள் நெருங்க நெருங்க இருவரும் பேசுவதையே நிறுத்திக் கொண்டு விரோதிகள் போல் நடந்து கொண்டார்கள். மறு நாள் போட்டிகள் ஆரம்பம். முதல் நாளன்று பள்ளி மைதானத்தில் நன்கு பயிற்சி செய்து விட்டு வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான் மோகன். பிள்ளையார் கோயிலின் வாசலில் ரவி பிள்ளையாரை வணங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

'ஓகோ! நாளைக்கு நடக்கும் போட்டிகளில் தானே ஜெயிக்க வேண்டுமென்று வேண்டுகிறான் போலிருக்கிறது. உம்... இருக்கட்டும், இருக்கட்டும்' என்று மனத்துக்குள்ளேயே கறுவினான் மோகன்.

இரவு கட்டிலில் படுத்துக் கொண்டிருந்த மோகன் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்தான். 'ரவி பிள்ளையாரிடம் என்ன வேண்டி யிருப்பான், என்ன வரம் கேட்டிருப்பான்?' என்ற கேள்விகள் அலை அலையாக அவன் மனத்தில் மோதியவண்ணம் இருந்தன.

பந்தய தினத்தன்று காலை பிள்ளையார் கோயிலின் வாசலில் நின்று கொண்டு விநாயகரை இரு கை கூப்பி வணங்கிக் கொண்டிருந்தான் மோகன். அவனுக்குப் பக்கத்தில் ரவியும் விநாயகப் பெருமானை வணங்கிக் கொண்டிருந்தான்.

அப்போது அவர்கள் எதிரில் விநாயகர் தோன்றி, "குழந்தைகளே, உங்கள் பக்தியைப் பாராட்டினேன். உங்களுக்கு என்ன வரம் வேண்டும் என்று கேளுங்கள். ஒருவருக்கு ஒரு வரம் மட்டும்தான் கொடுப்பேன். அதிலும் ஒரு நிபந்தனை. ஒருவன் கேட்கும் வரத்தின் பலனால் அடுத்தவனுக்கு இரு மடங்கு பலன் கிடைக்கும். ஆகவே கேட்கப் போகும் ஒரு வரத்தை நன்றாக யோசித்துக் கேளுங்கள்" என்றார்.

இருவருமே யோசித்தார்கள். 'நான் மட்டும் ஜெயிக்க வேண்டும் என்று வரம் கேட்டால் என்னை விட இரு மடங்கு வெற்றி அல்லவா அவனுக்குக் கிடைக்கும்? ஆகவே, அவன் முதலில் கேட்கட்டும். பிறகு நான் கேட்கிறேன்' என்று மனத்துக்குள்ளேயே நினைத்துக் கொண்டான் மோகன்.



ரவி, "ஆதி முதல்வனே! நாளை நான் மூன்று போட்டிகளில் கலந்து கொள்ளப் போகிறேன். அந்த மூன்று போட்டிகளில் ஒரு போட்டியில் மட்டும் நான் தோல்வியுற வேண்டும்" என்றுபுத்திசாலித்தனமாக வரம் கேட்டான். தான் ஒரு போட்டியில்தோல்வியுற்றால் மோகன் இரு போட்டிகளில் தோல்வி பெறுவான் என்ற எண்ணத்தில்.

"சரி, அப்படியே வரம் தந்தோம்" என்றார்விநாயகர்

மோகன், ரவியை எப்படியும் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில், ''விநாயகப் பெருமானே! நாளை நடக்கவிருக்கும் போட்டியில் முதல் போட்டியிலேயே எனக்கு ஒரு காலில் மட்டும் அடிபட வேண்டும்'' என்று வரம் கேட்டான். 'தனக்கு ஒரு காலில் அடிபட்டால் அவனுக்கு இரண்டு கால்களிலும் அடிபடும். இரண்டு கால்களில் அடிபட்ட அவன் மற்ற இரண்டு போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது' என்ற கெட்ட எண்ணத்தில் அப்படியொரு விசித்திரமான வரத்தைக் கேட்டான் மோகன்.

''அப்படியே நடக்கும்'' என்று கூறி விட்டு மறைந்தார் விநாயகர்.

''எனக்கு ஒரு காலில்தான் அடிபடும். ரவிக்கு இரண்டு கால்களிலும் அடிபட்டுப் போட்டியில் கலந்து கொள்ளாமல்



தவிப்பான். எனக்கே வெற்றி! ஹையா! ஹையா!'' என்று கத்திக் கொண்டே கட்டிலிலிருந்து உருண்டு 'பொத்' என்று கீழே விழுந்தான் மோகன்.

சத்தம் கேட்டு அவனது பெற்றோர்கள், ''என்னடா மோகன், என்ன? என்ன?'' என்று பதறியடித்துக் கொண்டு ஓடி வந்தார்கள்.

''என்னடா, ஏதாவது கனவு கண்டாயா?'' என்றார் அவனது தந்தை.

''கனவா ?'' என்று விழித்தான் மோகன்.

மறுநாள் நடக்கவிருக்கும் போட்டிகளில் யார் வெற்றி பெற்றிருப்பார்கள்? ரவியா? மோகனா? நீங்களே ஊகியுங்கள்.

உங்களால் ஊகிக்க முடியவில்லையா? இதோ மீண்டும் கதையைப் படியுங்கள்.

கீழே விழுந்து கிடப்பதை அறிந்த மோகன் எழுந்திருக்க முயன்றான்.


''ஆ! அம்மா, நெஜமாகவே காலில் எனக்கு அடிபட்டுடுத்தே. கால் வலிக்குதே!'' என்று கதறினான்.


''கொஞ்சம் அமைதியா இரு. காலுக்குத் தைலம் தேய்த்து விடுகிறேன். காலையிலே டாக்டர்கிட்டே போகலாம்'' என்றாள் அவன் தாயார்.


மறு நாள் மாலை காலில் கட்டுடன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தான் மோகன். அவனால் போட்டியில் கலந்து கொள்ள முடியவில்லை. அப்போது ரவி இரு வெள்ளிக் கோப்பைகளுடன் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தான்.

'பாவி! பிள்ளையார் கிட்டே வரம் கேட்ட மாதிரியே ஒரு போட்டியில் மட்டும் தோல்வி அடைஞ்சிருக்கான். இரு போட்டிகளில் அவன் வெற்றி பெற்றுப் பரிசுகளுடன் வருகிறானே. அவனுக்கு இரண்டு கால்களிலேயும் அடிபட்டிருக்குதா?' என்று அவன் கால்களைப் பார்த்தான் மோகன்.

ரவியின் இரு கால்களிலும் சிறிய பிளாஸ்திரி போடப் பட்டிருந்தது. உயரம் தாண்டும் போட்டியின்போது மேலே வைக்கப் பட்டிருந்த கழியில் அவன் கால் பட்டுத் தடுக்கி விழுந்து விட்டதால் அவன் கால்களிலே இலேசாகச் சிராய்ப்பு ஏற்பட்டதாம். நன்றாய்க் கனவு கண்டோம் என்று தன்னையே நொந்து கொண்டான் மோகன்.


ஜெய் ஹனுமான்
கதை: ரா. கணபதி
சித்திரம்: வினு
7
பொழுது விடிந்தது. வானரப் பெண் மறுபடியும் ரிக்ஷன் என்ற ஆண் மகனானான்.
இந்த இரு குழந்தைகளையும் வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது? பிரும்மாவைத் தியானிப்போம்.
கவலைப்படாதே. நான் ஒரு தேவ தூதனை அனுப்புகிறேன். அவன் சொற்படி நடந்து கொள். எல்லாம் சரியாகும்.
பாரதத்தின் மேற்கு மலைப்பகுதியில் கிஷ்கிந்தை என்ற இடத்தில் தேவர்களெல்லாம் வானரர்களாக அவதரிக்கப் போகிறார்கள். இந்த ரிக்ஷனை இப்போது அங்குள்ள வானரங்களுக்கு அரசனாக முடி சூட்டி விட்டு வா.
பிரும்மாவின் ஆணைப்படி, கேசரி உட்பட இவ்வுலகிலுள்ள எல்லா வானரர்களுக்கும் கிஷ்கிந்தை மன்னனாகிய நீயே தலைவனாக இருப்பாயாக.
தூதனே! அஞ்சனா புத்திரனை ஹனுமனைக் கொண்டு போய் சுக்ரீவனுக்குத் தோழனாக்கி விட்டு வா.
தேவதூதன் - கேசரி, ஹனுமன், அஞ்சனையுடன் கிஷ்கிந்தைக்கு வருகிறான்.
கிஷ்கிந்தையின் இளவரசே! என் மைந்தன் ஹனுமானை உன்னிடம் ஒப்படைக்கிறேன். நீங்கள் இருவரும் இணை பிரியாத நண்பர்களாக இருக்க வேண்டும்.


சுக்ரீவனைவிட எல்லா வகையிலும் சிறந்தவராக ஆஞ்சநேயர் இருந்தும் சாபப்படி தம் பெருமைகளை மறந்து சுக்ரீவனுக்குப் பணிவிடை புரிகிறார்.
ரிஷி ராஜன் காலமாகிறார்....
வாலி வானரர்களுக்கு மன்னராகிறான்......
வாலி தாரை என்பவளை மணந்து கொள்கிறான்....
யுவராஜா சுக்ரீவன் ருமை என்பவளை மணந்து கொள்கிறான்....
ஆசைகளை வென்ற ஆஞ்சநேயர் திருமணமே செய்து கொள்ளாமல் தூய பிரும்மசாரியாகவே வாழ்ந்து வருகிறார்.
தொடரும்



காமிராவின் கதை

கிருஷ்ணவேணி

நமக்குச் சுதந்திரம் வாங்கித் தந்த பெரியோர்கள் இன்று நம்மிடையே இல்லா விட்டாலும் அவர்கள் வாழ்ந்த காலத்தில் கலந்து கொண்ட பல்வேறு நிகழ்ச்சிகளின் படங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவர்களை நேரிலே பார்ப்பது, போலவும், அவர்கள் பேச்சை, சிரிப்பை, கோபத்தை, குதூகலத்தை இன்றும், என்றும், எப்பொழுதும் உணர்ந்து மகிழக்கூடிய ஒரு சாதனம் இன்றைக்கு நம்மிடையே உள்ளது. அதுதான் புகைப்படங்கள்.

மராட்டிய வீரன் சிவாஜியையோ, ரஜபுத்திர திலகமான ராணா பிரதாபையோ, மொகலாயப் பேரரசர் அக்பரையோ, ஷேக்ஸ்பியரையோ நமக்கு உருவகப்படுத்த அவர்களின் புகைப்படங்கள் கிடையாது. ஓவியர்களின் சித்திரங்கள்தான் உதவுகின்றன.

இன்றைய நாகரிக வாழ்வில் சகல துறைகளிலும் புகைப்படம் ஓர் இன்றியமையாத இடத்தைப் பெற்றிருப்பது உங்களுக்குத் தெரியும்.

புகைப்படக் கலை என்பது நவீனகால கண்டுபிடிப்பல்ல. தவிர இது ஒரு தனி மனிதரின் கண்டுபிடிப்பும் அல்ல. கி.பி. 1100ம் ஆண்டிலேயே மனிதன் காமிராவைப் பற்றி—அதன் தொடர்பாக ஒன்றை - அறிந்திருந்தான். ஓவியர்கள் தாங்கள் வரையும் இயற்கைக் காட்சிகளை மிக அருகே கண்டு எழுதப் பயன்படுத்தி வந்தார்கள் ஒரு சாதனத்தை. இதற்குக் **காமிரா ஆப்ஸ்குரா** (Camera Abscura) என்று பெயர். ஒரு பெரிய மரப் பெட்டியின் முன்னால் லென்ஸும், பின்னால் தேய்க்கப்பட்ட கண்ணாடித் திரையும் உள்ள ஓர் அமைப்புத்தான் இந்தக் காமிரா ஆப்ஸ்குரா.

வெளிச்சம் குறைவான இடத்தில் இப்பெட்டியை வைத்து அதன் லென்ஸ் பகுதி காட்சியை நோக்குமாறு வைத்தால் வெகு தூரத்தில் உள்ள காட்சிகள் துல்லியமாகக் கண்ணாடித் திரையில் தெரியும். இதுவே காமிரா ஆப்ஸ்குராவின் செயல் முறை. ஆனால் இதில் பிரதிபலிக்கும் காட்சிகளை நிரந்தரமாக நிறுத்தி வைத்துக் கொள்ள முடியாது.

காட்சிகள் விழும் இடத்தில் அதை நிலையாக நிறுத்திக் கொள்ளும் முறையைக் காணுவதில் முனைந்தான் மனிதன். 1802ல் **தாமஸ் வெட்ஜ்வுட்** என்ற ஆங்கிலேயர் சில்வர் நைட்ரேட் தடவிய பரப்பின் மீது ஒளி பாயும் போது ரசாயன மாற்றங்களைத் தோற்றுவிக்கிறது என்பதைக் கண்டார். ஆனால் அப்படிப் பதிவான ஒளி மாற்றம் அதன் மீது மாற்று ஒளி பதியும்போது மங்கி மறைந்து போயிற்று. புகைப் படக் கலையின் நேர் பாதைக்கு இந்தக் கண்டுபிடிப்பும் மனிதனை இழுத்துச் செல்லவில்லை.

1822ல் நிஸபோர் நீப்ஸி (Nicephore Niepce) என்ற ஒரு பிரெஞ்சுக்காரர் நிரந்தரமாக நிலைத்து நிற்கும் காட்சிகளைப் படம் எடுக்கும் முறையைக் கண்டுபிடித்தார். பிட்டுமன் என்று ஒரு கரிப் பொருள். இதைப் படமெடுக்கும் தகட்டில் தடவினார். இதில் காமிரா ஆப்ஸ்குராவின் மூலம் காட்சிகளை விழச் செய்தார். பிறகு இந்தப் பிளேட்டை லாவண்டர் என்ணெயினால் துடைத்தார். லாவண்டர் ஆயில் அல்லது அமிலம் அதிக ஒளி பாயாத இடங்களில் உள்ள பிட்டுமனை (படத்தின் இருட்டான பகுதிகள்)

புகைப்படக் கலைக்குப் புத்துயிரூட்டிய டாகரே




இந்த அமிலம் கரைத்துக் கழுவியது. அதிக ஒளி பட்டு அதனால் மாற்றம் அடைந்த பிட்டுமன் கெட்டியாகித் தகட்டிலேயே தங்கியது. பிட்டுமன் பூசிய தகட்டில் காட்சிகள் பதிவாக (எக்ஸ்போஷர்) எட்டு மணி நேரம் தேவைப்பட்டது. எப்படியானாலும் என்ன? மாறுபட்ட ஒளிப் பதிவுக்கு ஏற்பத் தகட்டில் காட்சிகள் பதிவாயின! புகைப்படக் கலைக்கான நேர் வழியில் அடியெடுத்து வைத்து விட்டார் நீப்ஸி.

ஸெயிண்ட் லோப் டி வாரன்ஸ் என்ற சின்னஞ் சிறிய ஊரில்தான் நீப்ஸி தம்முடைய இந்தக் கண்டுபிடிப்பில் வெற்றி கண்டார். புகைப் படக் கலைக்கு வித்திட்ட அவருக்கு அந்த ஊரில் ஒரு நினைவுச் சின்னம் எழுப்பி இருக்கிறார்கள். அதில் "**இந்தக் கிராமத்தில்தான் 1822ல் நிஸபோர் நீப்ஸி புகைப்படக் கலையைக் கண்டுபிடித்தார்**" என்று பொறிக்கப்பட்டுள்ளது.

இதே சமயத்தில் பிரான்ஸ் தேசத்தில் ஓர் ஓவியரும் இதே விஷயமாக ஆராய்ந்து கொண்டிருந்தார். அவர் பெயர் **தாகரே** (Daguerre) என்பது. காமிரா ஆப்ஸ்குராவில் விழும் காட்சிகளை நிரந்தரமாகப் பதிக்க என்ன செய்யலாம் என்பதில் தமது முழுக் கவனத்தையும் செலுத்திய இவர் பல இரவுகளைத் தூக்கமின்றிக் கழித்தார். இதனால் இவரது மனைவி கணவனுக்குப் பைத்தியம் பிடித்து விடுமோ என்று கூடப் பயந்தாள்.



பல பிரதிகள் தயாரிக்கும் முறைகண்ட தால்போட்



காமிரா ஆப்ஸ்குராவும் அதன் செயல்முறையும்

தாகரே தமது ஓவியங்களைக் கொண்டு பாரீஸில் ஒரு கண் காட்சியை நடத்தி வந்தார். இதற்கு 'டியோரமா, (Diorama) என்று பெயர். பிரான்ஸ், ஸ்விட்ஜர்லாந்து ஆகிய இடங்களின் தத்ரூபமான இயற்கை வனப்புக்களை மிகப் பெரிய அளவு ஓவியங்களாகத் தீட்டி இக் காட்சியில் வைத்திருந்தார் தாகரே. காமிரா ஆப்ஸ்குராவின் உதவியினாலேயே இத்தகைய ஓவியங்களை உருவாக்கி யிருந்தார் அவர். ஆப்ஸ்குராவின் பின்னால் உள்ள தேய்க்கப்பட்ட கண்ணாடித் திரைக்குப் பதில் உலோகத் தகடுகளை உபயோகித்தார். இந்தத் தகடுகளில் ஒளியினால் மாற்றம் அடையக்கூடிய ரசாயனங்களைத் தடவியிருந்தார். இதனால் காட்சிகளின் பிரதிபலிப்புக்கள் இத் தகடுகளில் பதிவாயின. ஆனால் அதை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தபோது பதிவான அக் காட்சிகள் மங்கி மறைந்து போயின.

என்ன செய்தால் இந்தக் காட்சிகளை மறைந்து போகாமல் நிரந்தரமாக இருக்கச் செய்யலாம் என்று இதே நினைவில் தூக்கமின்றிக் கழிக்கலானார்.

இந்த வேளையில்தான் நீப்ஸியைப் பற்றியும் அவரது ஆராய்ச்சிகளைப் பற்றியும் கேள்விப்பட்டார் தாகரே. இந்தச் சந்திப்பு நிகழ்ந்தது 1826ல். இதற்கு மூன்று ஆண்டுகளுக்குப் பின் இருவரும் இணைந்து கூட்டாக ஆராய்ச்சிகளைத் தொடர்ந்தார்கள். ஆனால் துரதிர்ஷ்ட

வாடாமலர்

> பெரியவன் சிறியவனைப் போலவும் தலைவன் தொண்டனைப் போலவும் இருக்க வேண்டும்
>
> — இயேசுநாதர்

வசமாக நீப்ஸ் 1833ல் காலமானார். ஆனால் தாகரே நீப்ஸின் மகனுடன் கூட்டைத் தொடர்ந்து ஆராயலானார். ஆனாலும் உழைப்பெல்லாம் தாகரேயினுடையதுதான். விரைவிலேயே தாகரே சில நிமிஷங்களிலேயே காட்சிகள் தகட்டில் பதியக் கூடிய ஒரு முறையைக் கண்டுபிடித்தார். வெள்ளித் தகட்டில் அயோடினைத் தடவிப் பயன்படுத்தினார். 'எக்ஸ்போஸ்' ஆனதும் தகட்டைப் பாதரசக் கலவையினால் கழுவினார். துல்லியமான காட்சிகள் தகட்டில் தெரிந்தன. காட்சிகளை நிரந்தரமாக நிலைக்கச் செய்ய ஹைப்போவை (ஹைபோ-ஸல்பேட் ஆஃப் சோடா) பயன்படுத்தினார். பலன் நிலைத்து நிற்கக்கூடிய தகதகக்கும் அற்புதமான புகைப்படங்கள் கிடைத்தன.


1839ல் தம் கண்டுபிடிப்பைப் பொது மக்களுக்குக் காட்சியாக்கி விளக்கினார் தாகரே. பாரிஸிலுள்ள சயன்ஸ் அகாதமியில் தம் கண்டுபிடிப்பை வைத்தார். பாரிஸ் மக்கள் வியப்பிலும் மகிழ்ச்சியிலும் மூழ்கினார்கள். எங்கும் ஒரே பரபரப்பு. அற்புதமான காட்சிகளின் நடுவே தங்களைப் புகைப்படம் எடுத்துக் கொள்ளத் துடித்தார்கள் மக்கள். பாரிஸ் அரசாங்கம், இந்த அற்புதக் கண்டுபிடிப்புக்காகத் தாகரேக்கும் நீப்ஸின் மகனுக்கும் அவர்கள் வாழ்நாள் முழுவதும் பென்ஷன் தரும்படி உத்தரவிட்டது. தாகரே தம் புகைப்பட முறைக்குத் **தாகரோ டைப்** (Daguerreotype) என்று பெயரிட்டார்.

1840ம் ஆண்டிலிருந்து புகைப்படக் கலை வளரத் தொடங்கியது.

தாகரேயின் முறையில் பயன்பட்டது உலோகத் தகடுதான். இன்று நீங்கள் காணுவது போலக் காகிதத்தில் புகைப்படங்களை அவர் பதிக்கவில்லை. இதற்கு வித்திட்டவர் ஓர் ஆங்கிலேயர். **வில்லியம் ஹென்றி ஃபாக்ஸ் தால்போட்** என்பது அவர் பெயர். தாகரேயின் முறையில் 1834ம் ஆண்டிலிருந்து பல விதமான ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருந்தார் தால்போட். ஒரு படத்திலிருந்து பல பிரதிகளைத் தயாரிக்கும் முறையைக் கண்டு பிடித்தவர் இவர்தான். உலோகத் தகட்டுக்குப் பதில் ரசாயனக் கலவை பூசிய காகிதத்தை முதன் முதலில் பயன்படுத்தினார் தால்போட். இதைக் கழுவியபோது நெகடிவ் கிடைத்தது. அதாவது படத்தின் கறுப்பான பாகங்கள் வெளுப்பாகவும் வெளுப்பான பாகங்கள் கறுப்பாகவும் மாறி மாறித் தெரிவதற்கு நெகடிவ் என்று பெயர். இதற்கு முதலில் காலோடைப் (Calotype) என்று பெயரிட்டனர்.

இந்த நெகடிவ் காகிதத்தை எண்ணெயில் நனைத்தபோது அது ஒளி ஊடுருவக் கூடிய (டிரான்ஸ்பரண்ட்) தாகியது. அதன் அடியில் மற்றொரு ரசாயனக் கலவை பூசிய காகிதத்தை வைத்து நெகடிவ் வழியாக மறுபடியும் ஒளியைப் பாய்ச்சினார் தால்போட். கீழுள்ள இரண்டாவது காகிதம் பாஸிடிவ் ஆகக் — அதாவது காட்சிகளை நாம் எப்படிக் காண்கிறோமோ அதே போல - கிடைத்தது. இப்படி ஒரு நெகடிவைக் கொண்டு எத்தனை புகைப்படப் பிரதிகள் (பாஸிடிவ்) வேண்டுமானாலும் எடுக்கலாம் என்பதற்கு வழி காட்டினார் வில்லியம் ஹென்றி ஃபாக்ஸ் தால்போட். புகைப்படக் கலையில் ஒரு மகத்தான முன்னேற்றம் இல்லையா இது?

அடுத்தடுத்து வந்த ஆராய்ச்சியாளர்கள் புகைப்படக் கலையில் படிப்படியாகப் பல முன்னேற்றங்களையும் மாற்றங்களையும் தோற்றுவித்தார்கள். ஸெலுலாய்ட் தோன்றியது. காமிராக்கள் அபிவிருத்தி அடைந்தன. பிலிம் சுருள், பதிக்கும் முறை, கழுவுதல், பிரதிகள் போடுதல், எல்லாவற்றிலும் இன்று எத்தனையோ முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் இவையெல்லாம் தாகரே, நீப்ஸ் இவர்களின் உழைப்பால் உருவானவை தானே?



"ரொம்ப மக்கா யிருக்கிறே! உங்கப்பாவை உடனே வந்து பார்க்கச் சொல்லு."
"சொன்னா உடனே வந்துடுவார். ஆனால் இருபது ரூபாயைத் தயாராக வைத்துக் கொள்ளணும். அவர் டாக்டர். ஒரு 'விஸிட்'டுக்கு இருபது ரூபாய் ஃபீஸ்."
"பல் டாக்டரைப் பார்க்கணும்னு லீவு எடுத்துண்டு கிரிக்கெட் மாட்சையா பார்த்திண்டிருக்கே ?"
"பல் டாக்டரைத்தான் பார்த்திண்டிருக்கேன். அவர்தான் இப்போ 'பாட்' பண்ணிண்டிருக்கார்!"
சாமா
" உனக்கு முன்னாலே வடக்கு இருக்கு. உன் வலது பக்கம் கிழக்கு இருக்கு. உன் இடப் பக்கம் மேற்கு இருக்கு. உனக்குப் பின்பக்கம் என்ன இருக்கும்?"
"பின்பக்கம் என் சட்டையில் கிழிசல் இருக்கு சார்!"
"உங்க வீட்டில் எத்தனை பேர் வந்தாலும் எப்போ வந்தாலும் காப்பி கொடுக்கிறீங்களே, எப்படி?"
"எங்க வீட்டில் காமதேனு இருக்கு !"
"அப்படியா ?"
"கார்ப்பரேஷன் குழாய்தான் எங்கள் வீட்டுக் காமதேனு!"
"உம்மணாமூஞ்சியாட்டம் உட்கார்ந்திருக்கையே? ம்....ஒன்....டூ....த்ரீ...."
" ஆக்ஷன் காட்டு, போட்டோ எடுக்கறேன்!"

விபத்தைத் தவிர்க்க வெடிக்கும் குண்டு

'டெடர்நேடர்' (Detornator) என்றால் என்ன தெரியுமா? கையில் கட்டிக் கொள்ளும் 'ரிஸ்ட் வாட்ச்' போன்ற தட்டையான அமைப்பில் இருக்கும் சிறிய வெடிகுண்டு ஆகும். இந்தத் தட்டையான குண்டின் மீது ரயில் சக்கரம் ஏறினால் அந்தக் குண்டு வெடிக்கும். அதனால் தண்டவாளத்துக்குக் கேடு ஏதும் இல்லை. இந்தக் குண்டுகளைத் 'தண்டவாளம் சரியாக இருக்கிறதா?' என்று பரிசோதிக்கும் 'கேங்மென்'கள் வைத்திருப்பார்கள். தண்டவாளம் பழுதாக இருந்தாலும் வழியில் ஆபத்து இருந்தாலும் இருப்புப் பாதை, ரயில் செல்ல முடியாத அளவு மோசமாக இருந்தாலும் இன்ஜின் டிரைவருக்கு எச்சரிக்கை செய்ய இந்தக் குண்டுகளைத் தண்டவாளத்தில் பொருத்திவிடுவார்கள். இந்தக் குண்டின் மீது ரயில் சக்கரம் ஏறியதும் குண்டு வெடிக்கும். டிரைவரும் உடனே வண்டியை நிறுத்திவிடுவார்.

விபத்து என்றால் விரையும் வண்டித் தொடர்


ஓடிக் கொண்டிருக்கும் ரயில் வண்டிக்கு ஏதாவது விபத்து ஏற்பட்டு வழியில் வண்டி நின்றுவிட்டாலோ, தடம் புரண்டு வண்டி கவிழ்ந்துவிட்டாலோ, அந்த விபத்து குறித்து எப்படி நடவடிக்கைகள் எடுக்கிறார்கள் தெரியுமா?

விபத்து நடந்த இடத்துக்கு அருகில் இன்ஜினிலிருந்து இரண்டு பர்லாங் தூரத்தில் ஒரு 'டெடர்நேடர்' (Detornator) குண்டைத் தண்டவாளத்தில் பயர்மேனோ டிரைவரோ இணைப்பர். இதே போல் அடுத்தடுத்து இரண்டு பர்லாங் தள்ளி இன்னும் இரண்டுகுண்டுகளைத் தண்டவாளத்தில் பொருத்துவார்கள். இதே போல வண்டியின் பின்புறத்திலும் அடுத்தடுத்து இரண்டு பர்லாங்குக்கு ஒரு 'டெடர்நேடர்' வீதம் குண்டுகள் தண்டவாளத்தில் பொருத்தப்படும். டெடர் நேட்டரைத் தண்டவாளத்தில் பொருத்திய பின் ரயில் இன்ஜின் டிரைவர் அல்லது 'கார்டு' பக்கத்திலிருக்கும் ரயில் நிலைய ஸ்டேஷன் மாஸ்டருக்கு விபத்து நடந்துள்ள இடத்தைக் குறித்து (பக்கத்திலிருக்கும் தந்திக் கம்பங்களின் எண்களையும் குறிப்பது உண்டு) ''பயர்மென்'' மூலம் சொல்லி அனுப்புவார்கள். விபத்தின் விவரத்தை அறிந்த அந்த ஸ்டேஷன் மாஸ்டர் உடனே ரயில்வே கண்ட்ரோலருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் செய்தியை டெலிபோன் மூலம் தெரிவிப்பார். செய்தி கிடைத்ததும் கண்ட்ரோலர் மேலதிகாரிகளுக்குச் செய்தி கொடுப்பதுடன், அருகில் இருக்கும் 'லோகோ—ஷெட்டு'க்குத் தகவல் கொடுப்பார். தகவல் கிடைத்த உடனே, லோகோ ஷெட்டிலிருந்தும் தலைமைக் காரியாலயத்திலிருந்தும் அவசரகால அழைப்புச் சங்கு ஊதப்படும். சங்கொலி கேட்டதும் 'ப்ரேக் டவுன் ஸ்குவார்'டைச் சேர்ந்த ஊழியர்களும் மற்றும் முக்கியமானவர்களும் எந்த நேரமாக இருந்தாலும் வீட்டிலிருந்து புறப்பட்டுவிடுவார்கள். லோகோ ஷெட்டில் ஒரு பக்கத்தில் 'எமர்ஜென்ஸி வேன்' எப்பொழுதும் தயாராக இருக்கும். இந்த அவசரகால உதவி வண்டித் தொடரில் சாமான்கள் உள்ள ரயில் பெட்டி, தண்ணீர் டாங்கு, மின்சாரச்சாமான்கள் ரயில் பெட்டி, ரெடிமேட் உணவு தயார் செய்யும் ரயில் பெட்டி (காப்பித் தூள்-பால் டப்பா, ரவை முதலியவைகள்) பெரிய பெட்ரோமாக்ஸ், மின்சார விளக்குகள் கொண்ட பெட்டி; பளுவைத் தூக்கும் கிரேன், ஆட்கள் செல்லக்கூடிய பெட்டி, மருத்துவ உதவி ரயில் பெட்டி மற்றும் அத்தியாவசியமான சில ரயில் பெட்டிகளுடன் கடைசியில் கார்டு இருக்கும் பெட்டியும் இருக்கும். இந்தத் தொடரை லோகோ ஷெட்டிலிருந்து ஒரு ரயில் இன்ஜின் இழுத்துக் கொண்டு ரயில் நிலையத்துக்கு வந்து நிற்கும். இதற்குள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், ஊழியர்கள் அனைவரும் ரயில் நிலையத்துக்கு வந்திருப்பார்கள். அவர்கள் அனைவரும் வந்தவுடன் அவசர கால உதவி ரயில் வண்டி விபத்து நடந்த இடத்துக்கு விரைந்து செல்லும். பிரயாணிகள் வண்டி விபத்துக்குள்ளாகியிருந்தால் டாக்டர்களும் உடன் செல்வார்கள். இவ்வளவும் அவசர காலச் சங்கு ஊதிய அரைமணிக்குள் நடக்கும். விபத்து நடந்த இடத்துக்குச் சென்றதும் தகுந்த நடவடிக்கை எடுப்பதுடன் அடுத்து வண்டிகள் செல்வதற்காக ரயில் பாதை சரி செய்யப்படும். பிரயாணிகள் வண்டி விபத்துக்குள்ளாகியிருந்தால் பிரயாணிகள் மேற்கொண்டு பயணம் செய்ய மாற்று வழிகளையும் மேற்கொள்வார்கள்.

— பொன்மலை பரிமளம்

மூளைக்கு வேலை


குறுக்கெழுத்துக் கட்டங்களைப் பற்றி உங்களுக்கு அதிகமாக விளக்க வேண்டாம். உங்களுக்கேதான் தெரியுமே. இங்கு இரண்டு குறுக்கெழுத்து விளையாட்டுக்கள் வெளியாகியுள்ளன. இதில் கொடுத்துள்ள குறிப்புக்களின்படி இக்கட்டங்களில் எழுத்துக்களை நிரப்பிப் பூர்த்தி செய்யுங்கள் பார்க்கலாம்.



இடமிருந்து வலம்: 1. கோகுலத்தின் முதல் பக்கக் கதாநாயகன், 5. இவர் காட்டில் தவம் செய்வார்; தம் பெயரில் உள்ளதையும் மறந்து! 6. மார்கழிக்கு அடுத்த மாதத்தில் என்ன விசேஷம்? 8. குட்டுப் பட்டாலும் இது உள்ள கையால் பட வேண்டும்! 10 அரிசி மில்லில் அரிசியுடன் பிறப்பது, 13. அமாவாசை இரவில் குழந்தைகள் இவரை இப்படி அழைப்பார்களா? இல்லாவிட்டால் பௌர்ணமியிலா?

மேலிருந்து கீழ்: 1. கோகுலம் இவர்களுக்கான பத்திரிகை, 2. ரவையில் செய்யப்படும் இதைப் பாட்டியும் தின்னலாம்; பேத்தியும் உண்ணலாம், 3. பாகப் பிரிவினையில் கிடைப்பது குழம்பி உள்ளது. 4. நாம் தலையாட்டினால் இது என்று பொருளோ? 5. கல்யாண வாழ்த்தும் தாங்கி வரும் துக்கச் செய்தியும் தூக்கி வரும், 7. புளுகினால் இதைத் திரிக்கிறான் என்பார்கள். 8. தமிழ் வார்த்தைதான். ஆங்கிலத்தில் அர்த்தம் எடுத்துக் கொண்டால் நிறையக் கொடுப்பார்கள் குடிக்க. 7. சரியான வால்! தலை கீழாகத் தொங்குகிறதே! வேறு யார் குரங்குதான், 11. பாற்கடலில் அமுதம் மட்டுமா கிடைத்தது? இதுவும்தான்! 12. ஆமா! இவர் கோகுலக் கதாநாயகனை வரைபவரோ!


□ □ □ □ □




இடமிருந்து வலம்: 1. இதை உண்டால் இறப்பே கிடையாது. 3. இது இல்லாமல் சாம்பார்கூட வைக்கலாம்; கல்யாணம் செய்ய முடியாதாம்! 5. தமிழுக்கே உரித்தான 'கை' தேர்ந்த ஒலி. 6. குழந்தைக் கதைகளை எழுதும் 'எங்க' உறவுக்காரர். 8. பொழுது போகவில்லையா, இதைக் கூறு. சண்டையாவது மூளும். 11. பழங்காலப் புலவர்கள் யாரைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்றனர்? 12. உதடு இதுவாகவே வெற்றிலை போடுகிறோம். 13. ஆடலுடன் இது சேர்ந்தால் சுகம் சுகம் சுகம்.

மேலிருந்து கீழ்: 1. இரகசியம் பேச வேண்டும். கிட்டே வா. 2. காரியம் ஆக வேண்டுமா? இசையுடன் வணக்கம் செய். 3. நவமணியுள் ஒன்றாம்; கடலில் விளையுமாம்; நிறம் சிவப்பாம். 4. வட இந்தியனின் தோள். உனக்குத் தெரியா விட்டால் அம்புஜம் மாமியைக் கேள். 7. நாளைக்கு இட்டிலிக்குப் போட்டிருக்கிறேன்; அதனால் இது செய்யப் போக வேண்டும். 9. புதிய சபை! நாடகம், நடனம் எல்லாம் நிறையக் காட்டுகிறார்கள். 10. துப்பாக்கியை இயக்குதலும் தோசை தயாரித்தலும் ஒரே செயலா? 11. மக்கள் இப்படிச் சாவதைக் கண்டு நெஞ்சு பொறுக்கு தில்லை பாரதியாருக்கு.

—பி. ஜயசந்திரன்



— விடைகள் —





கூடாரத்தினுள்ளே!

விகேயெம்

‘ஹோ’ என்ற ஆரவாரம். மகிழ்ச்சிக் கோலாகலம். குழுமியுள்ளோரின் குழந்தைகளின் கரகோஷம் - கூடாரம் விம்மிப் புடைத்து உயர்ந்து தணியும்படியாக. உடனே அமைதி, நிசப்தம். ஊசி விழுந்தாலும் அதன் ஓசை கேட்கும்படி அப்படியொரு சலனமற்ற நிலை. இப்படி இரு வேறு விதமான சூழ்நிலைகளும் மாறி மாறி உருவாகும் ஒரே இடம் சர்க்கஸ்தான். குழந்தைகளுக்குக் கொண்டாட்டமான ஒரே காட்சி சர்க்கஸ்தான். மிருகக் காட்சி சாலைகளில் பல் வேறு மிருகங்களை மட்டும்தான் பார்க்கலாம். பொருட்காட்சிகளில் பல விளையாட்டுக்களையும் விநோதங்களையும் தான் பார்க்கலாம். ஆனல் இவை எல்லாவற்றையும் ஒரே இடத்தில் காணக் கூடிய இடம் சர்க்கஸ் தானே? இங்கு மிருகங்களைப் புத்தகங்களில் படித்துப்பார்த்த நிலையில் மட்டுமா காண்கிறீர்கள்? இல்லை. அவை விதவிதமான வேடிக்கைகள் செய்வதையும், விநோதமானநிலைகளில் பல சாகஸங்கள் புரிவதையும் காணலாமே?

யானை சைக்கிள் விடுவதை, மனிதக் குரங்கு சைக்கிள் ரிக்ஷாவில் இன்னொரு மனிதக் குரங்கை வைத்து ‘இஸ்துக்கினு’ போவதையும் சிம்பான்ஸி புகைவண்டியை ஓட்டிச் செல்வதையும், யானைகள் சிவலிங்கத்துக்கு அபிஷேகம்செய்து, குங்குமம் இட்டு, தேங்காய் உடைத்து, மணியடித்து பூஜை செய்து தரையில் விழுந்துவணங்குவதையும், சிங்கமும், புலியும், ஆடும் அருகருகே அமர்ந்து கொண்டு மகாநாடு நடத்துவதைப் பற்றியும் நீங்களெல்லாம் பாப்பா மலர்க் கதைகளில்தான் படித்திருப்பீர்கள். ‘அவையெல்லாம் கற்பனைதான். நிஜமாக எப்படி நடக்கும்?’ என்று நினைத்துக் கொண்டிருப்பீர்கள். இல்லையா? இப்படிப்பட்ட உங்களையெல்லாம் வியப்பில் ஆழ்த்தும்படியாகச் சென்னையில் இரண்டு மாதங்களுக்கு மேலாக முகாமிட்டிருந்த **ஜெமினி சர்க்கஸ்காரர்கள்** இத்தனை காட்சிகளையும் இதற்கும் மேலான பல்வேறு சாகஸச் செயல்களையும் நிஜமாக்கிக் காட்டினார்கள்.

கரணம் தப்பினால் மரணம் என்பது பழமொழி. அந்தரத்திலே கரணம் போடுவது அவர்களுக்குச் சர்வ சாதாரணம் என்பதை வாய் மூடாத நிலையில் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்த அத்தனை பேரும் அறிந்து வியந்து போனார்கள். ‘ட்ரபீஸ்’ எனப்படும் பார் விளையாட்டுக்குக் கட்டான உட



லும் கலங்காத நெஞ்சமும் காலப் பிரமாணம் தப்பாதபடி செயல்படும் துரிதமும், எல்லாவற்றுக்கும் மேலாக முறையான பயிற்சியும் வேண்டும். இத்தனையும் இணையும் போதுதான் பார்வையாளர்களிடமிருந்து ‘ஆஹா!’ ‘ஆஹா!’ என்ற வியப்பொலியைப் பரிசாகப் பெற முடியும். கயிற்றிலே தனியாக நடப்பது, இன்னொருவரைச் சுமந்தபடி நடப்பது, பறந்து வரும் தட்டுக்களை ஒன்று விடாமல் பிடித்து அடுக்கிக் கொள்ளும் லாகவம், மூன்று நான்கு கண்ணாடிப் புட்டிகளை ஒன்றன் மீது ஒன்றாக ஒரு குச்சியின் முனையில் நிற்க வைக்கும் சாக





ஸம் - இப்படியாக அடுத்தடுத்துக் காட்சிகள் தங்கு தடையின்றிச் சங்கிலித் தொடர் போல வருகின்றனவே, அந்த நிர்வாகத் திறமையைப் பாராட்டத் தான் வேண்டும்.

வெறுமே சைக்கிளில் ஏறி இறங்கி ஓட்டுவதையே பிரம்ம வித்தையாக நினைக்கும் நமக்கு இச் சர்க்கஸில் உள்ளவர்கள் கையில் அந்த சைக்கிள்கள் படும் பாட்டைப் பார்க்கும்போது நமக்கே வெட்கமாகத்தான் இருக்கிறது. 'அக்ரோபாட்' என்னும் அசகாய சூரத்தனங்களைச் செய்வதற்காகவே தயாரிக்கப்பட்ட பிரத்தியேகமான சைக்கிள்களோ அவைகள்? அப்படியே இருந்தாலும் அவற்றில் எத்தனை எத்தனை வேலைகளைச் செய்து காட்டுகிறார்கள்?

ஒரு பெண் மேஜை மீது மல்லாந்து படுத்து இரு கால்களையும் உயரத் தூக்குகிறாள். அவள் பாதத்தின் மீது ஒரு ஸ்டாண்டைப் பொருத்தி அதன் மீது ஒரு பீப்பாயை வைக்கிறார்கள். அதைக் காலால் உருட்டி வித்தை செய்யப்போவதாக நினைப்பீர்கள். ஆனால் அந்தப் பீப்பாய்க்குள்ளிருந்து பத்து வயதுச் சிறுமி வெளியே வந்து அதன் மீது உட்காருவாள். அந்தப் பீப்பாய்க்குள் அப்பெண் எப்படி முடங்கியபடி உள்ளிருந்தாள் என்று நம் வியப்பு அடங்குவதற்குள் அதனுள்ளிருந்து இன்னொரு பெண்ணும் வெளியே வருவாள். அவளும் "பீப்பாயின் மீது மெள்ள ஏறி அமர்ந்ததும் — ஆமாம்! மூன்றாவது பெண்ணும் அதனுள்ளிருந்து வெளியே வரும்போது உங்களால் அந்த அதிசயத்தைத் தாங்கவே முடியாது. மூன்று குழந்தைகள் அந்தச் சிறிய பீப்பாயினுள் எப்படி அடைபட்டிருந்தார்கள்? என்று எண்ணி வியப்பதா அல்லது அந்த மூன்று குழந்தைகளும் மறுபடியும் ஒவ்வொருவராக அந்தப் பீப்பாயின் உள்ளே புகுந்து மறையும்வரையில் உயர்த்திய காலைக் கொஞ்சமும் அசைக்காமல் இத்தனை நேரமும் பாலன்ஸ் செய்தபடி (ஆசனம் செய்யும் நிலையில்) படுத்திருக்கும் பெண்ணின் திறமையைப் பாராட்டுவதா? ரசிகர்களின் ஒருமுகமான பாராட்டுதலையும் கைதட்டுதலையும் பெறும் காட்சி இது. ஜெமினி சர்க்கஸின் விசேஷ வேடிக்கையாளர் நீர் யானையார். இவர் காட்டும் வேடிக்கை தனது பிரும்மாண்டமான வாயை 'ஆ' என்று திறந்து காட்டுவது தான். கோணல் மாணலான மூன்று நான்கு பற்களும் அந்த வாயும் சில குழந்தைகள் பயந்து கண்களை மூடிக் கொண்டன. ஹிப்போ அவர்களின் பூத உடலும் அகண்ட வாயும்தான் காட்சிப் பொருள்.

ஒரு சிறிய குடும்பத்தை நிர்வகிக்கவே இந்தக் காலத்தில் எத்தனை பாடுபட வேண்டியிருக்கிறது. அப்படியிருக்க யானையைக் கட்டித் தீனி போடுவது போல் என்பார்கள். ஒருயானைக்குத்தான் இந்தப் பழமொழி. ஜெமினி சர்க்கஸில் இருப்பதோ இருபது யானைகள், எட்டு ஒட்டகங்கள். இதே மாதிரி புலிகள், சிங்கங்கள், ஏராளமான குதிரைகள், குரங்குகள், கரடிகள், கழுதைகள், கலைஞர்கள், வேலையாட்கள் இத்தனை பேருக்கும் வாழ்வளித்துத் தானும் வாழ்ந்து வளர வேண்டுமானால்? ஊர் விட்டு ஊர் போகும்போது இத்தனை





சாதனங்களையும் கொண்டு போகவேண்டும். சாதாரணமான காரியமா?

ஜெமினி சர்க்கஸ் நம் நாட்டிலுள்ள பிரபல சர்க்கஸ்களில் முக்கியமான ஒன்று. வெளிநாடுகளுக்கெல்லாம் கூடப் போய்ப் பாராட்டுக்களைப் பெற்றிருக்கிறது. நம் நாட்டில் சர்க்கஸ் கலைஞர்கள் எல்லாம் அனேகமாகக் கேரளத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். இத்துறையில் அவர்கள் முன்னணியில் நிற்பதற்குக் கேரள மக்களுக்கு இயற்கையாகவே அமைந்துள்ள உறுதியான உடலும், தைரியமுமே காரணமாகும். சர்க்கஸ் கலைஞர்களை உருவாக்கப் பயிற்சி அளிக்கும் பள்ளிக்கூடம் கேரளாவில் இருக்கிறது.

சர்க்கஸ் பற்றிப் பொதுவான விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டாமா நீங்கள்? சர்க்கஸ் என்ற பெயர் இன்றைக்கு ஏற்பட்டதானாலும் இது மிக மிகத் தொன்மையான கலை. ஆதி காலத்திலிருந்தே மனிதன் பொழுதுபோக்கு அம்சங்களை விரும்பி வந்திருக்கிறான். மன்னர்களையும், மக்களையும் மகிழ்விப்பதற்கென்றே வித்தைகள் செய்வோர், பிராணிகளைப் பழக்கி வேடிக்கை காட்டுவோர், விதூஷகர்கள், மல்லர்கள் என்று அரசவையிலும் நாட்டிலும் பலர் இருந்தார்கள். அரசவைகளில் விசேஷ காலங்களில் இவர்கள் பல்வேறு வேடிக்கைகளையும் உடல் வல்லமையை விளக்கும் விளையாட்டுக்களையும் செய்து காட்டினார்கள். விதூஷகர்களை ஓரளவுக்கு இன்றைய சர்க்கஸ் பபூன்களோடு ஒப்பிடலாம். பொதுவாக பபூன்களுக்குச் சர்க்கஸில் காட்டப்படும் எல்லாச் சாகஸங்களும் அத்துப்படியாகி யிருக்கும்.

தமிழ் நாட்டில் தொம்மங்கூத்தாடிகள் என்றும், கழைக் கூத்தாடிகள் என்றும் வீதியில் விளையாட்டுக்களைச் செய்து காட்டி வந்தனர். உங்கள் வீட்டில் உள்ள பெரியவர்களைக் கேட்டால் சொல்லுவார்கள். இன்றைய சர்க்கஸில் நீங்கள் காணும் பார் விளையாட்டுக்களையும் மற்றும் பல சாகஸங்களையும் நாற்சந்தியில் கம்பங்களை நட்டுக் கயிற்றைக் கட்டித் தங்கள் மனைவி மக்களோடு அற்புதமாகச் செய்து காட்டுவார்கள் கழைக் கூத்தாடிகள். அவர்களும் சர்க்கஸின் முன்னோடிகள்தான்.

ரோமாபுரியில் கி. மு. மூன்றும் நூற்றாண்டிலேயே சர்க்கஸ் இருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். அதில், தேரோட்டம் (சாரியட் ரேஸ்) முக்கிய பங்கு வகித்தாலும் இன்றைய சர்க்கஸின் சூழ்நிலை உருவாகி யிருந்ததாகக் கருதப்படுகிறது. பொது மக்களின் மிகப் பெரிய பொழுதுபோக்கு அம்சமாக விளங்கியது ரோமானியர்களின் அன்றைய சர்க்கஸ். ரோமானியர்களின் காலத்துக்குப் பிறகு ஓர் ஆயிரம் ஆண்டுகள் வரையில் கட்டுப்பாட்டுடன் இயங்கும் சர்க்கஸ் முறை மறைந்து போயிற்று. பார் விளையாடுபவர்கள், பபூன்கள், கயிற்றில் நடப்பவர், பிராணிகளைப் பழக்கி வித்தை காட்டுபவர் என்று சிறு சிறு கூட்டத்தினர் நாடோடிகளாக நாடெங்கும் உலவி வந்தார்கள். மறுபடியும் 'சர்க்கஸ்' என்ற அமைப்பின் கீழ் திட்டமிட்டு இயங்கும் முறை 1768ல் இங்கிலாந்தில் தோன்றியது.



இன்று எல்லா நாடுகளிலுமே சர்க்கஸ் பிரபலமாகியுள்ளது. சர்க்கஸ் கலையில் வல்லவர்கள் ரஷ்யர்கள். ரஷ்ய சர்க்கஸ் மிகப் பிரபலமானது. ரஷ்யாவில் சர்க்கஸ் நிரந்தரமாகக் கட்டப்பட்டுள்ள அரங்குகளிலேயே நடக்கும். ஜப்பானியர்களும் சர்க்கஸ் வித்தைகளில் வல்லவர்கள். மேலை நாடுகளில் நைட் கிளப் நிகழ்ச்சிகளுக்கு இடை இடையே சர்க்கஸ் வித்தைகளையும் காட்டுவது வழக்கம். 'மாஜிக்' வேலைகளும் சர்க்கஸில் இடம் பெறுவதுண்டு. மேலை நாடுகளில் சர்க்கஸ்களில் 'க்ளௌன் — பபூன்' ஆகியவர்களுக்கு விசேஷ முக்கியத்துவம் கொடுப்பார்கள். அவர்களும் திறமை மிக்கவர்களாகப்

பார்வையாளர்களின் கவனத்தைக் கவரும்படியான செயல் களைச் செய்வார்கள். அவர்களுடைய மேக்கப்பும் சிறப்பாக இருக்கும். குழந்தைகள் கைகொட்டிச் சிரித்து மகிழ்வது 'க்ளௌன்'கள் வரும் போதுதான். ஆகவே இந்த பபூன்களின்வேடிக்கையில் நம் நாட்டில் இன்னும்அதிக அக்கறை காட்ட வேண்டியது அவசியம்.

சர்க்கஸ் நடத்துவது மிகவும் சிரமமான காரியம். ஏராளமான முதலீடும் ஒத்துழைப்பும் மனோதைரியமும் வேண்டும். எத்தனையோ ஆபத்துக்களையும் கஷ்டங்களையும் சமாளித்தாக வேண்டும். இந்தத் தொழிலுக்கு பொது மக்கள் நிறைய ஆதரவு தர வேண்டும்.

□ □ □ □ □ □ □ □ □

அமெரிக்க நாட்டில் சர்க்கஸ் பபூனை (க்ளௌன்) ஜோயி (Joey) என்று அழைப்பார்கள். முதன் முதலில் இப்படிப் புகழ் பெற்றவர் 1800ல் வாழ்ந்த கிரிமால்டி என்பவர். பபூன்களின் புகழுக்கு வழி வகுத்துக் கொடுத்தவர் கிரிமால்டி. இதன் பிறகு புகழ் பெற்ற கிளௌனாக விளங்கியவரும் ஓர் அமெரிக்கர்தான். இவர் பெயர் ஜார்ஜ் வாஷிங்டன் லேஃபட்டி. 1825லிருந்து 1877 வரை வாழ்ந்தவர். இதன் பிறகு வந்தவர் டான் ரைஸ். இவருக்குச் சொந்தமாகவே ஒரு சர்க்கஸ் நிறுவனம் வாஷிங்டனில் இருந்தது. மிருகங்களோடு இவர் செய்த வேடிக்கை மக்களைக் குதூகலத்தில் ஆழ்த்தின. இந்தப் பபூனுக்கு மிக மிக வேண்டியவராக இருந்தார் ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கன். அடிமை வியாபாரத்தை ஒழிப்பதற்கு இவர் தம் சர்க்கஸ் கூடாரத்தைப் பிரசார மேடையாக்கிக் கொண்டார், லிங்கனுக்கு ஆதரவாக. இன்றைய அமெரிக்க மாமாவான 'அங்கிள் ஸாம்' வேஷத்தை உருவாக்கியவர் இந்த டான் ரைஸ்தான். கோமாளியாகவே இருந்து அடிமைத்தனத்தை ஒழிக்க சர்க்கஸ் கூடாரங்களின் கீழிருந்து பிரசாரம் செய்து 1864ல் அமெரிக்க ஸெனட்டில் ஓர் இடத்தையும் தேர்தலில் நின்று ஜெயித்தார் இந்தக் கிளௌன். 'ஜனாதிபதியாக வேண்டும்' என்று அவரிடம் அன்பு கொண்ட மக்கள் கூவினார்கள். ஆனால் அவர் அவ்வளவு தூரத்துக்குப் போகவில்லை. இவர் காலத்தில்தான் த்ரீ ரிங் (மூன்று கூடார) சர்க்கஸ் முறை ஆரம்பமாகியது. இப்படிப் புகழ் பெற்ற பபூன்கள் பலர் உண்டு.

நீங்கள் செய்வது எதுவானாலும் சரி, பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் அதை சிறந்த முறையில் செய்ய உதவுகிறது.



பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் ஒரு 100 வாட் பல்பினைப் போல் இருபங்கு ஒளி தருகிறது. இருப்பினும் இதற்கு ஒரு 40 வாட் பல்புக்கான அளவு மின்சாரமே தேவைப்படுகிறது. பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் பொருத்தி மின்சாரத்தை மிச்சப்படுத்துங்கள்.
தரம் மற்றும் உழைப்பு இவ்விஷயத்தில் பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்டே வாங்குவதற்குச் சிறந்ததாகும். கச்சிதமான பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் யூனிட் தரமான உறுப்புகளுடன் முன்கூட்டியே ஒயர் செய்யப்பட்டதாகும். பொருத்துவதற்கு எளிதானது. உபயோகிப்பதற்கு சிக்கனமானது. வேலைகளை சிறந்த முறையில் செய்ய இது உதவுகிறது— உங்கள் கடையிலும் சரி, வீட்டிலும் சரி.

அரைப்பங்கு
சிலவில்
இருபங்கு
ஒளி!

சிறந்த ஒரு லாம்ப் வேண்டுமா ?
அதை முதலில் அளிப்பது பிலிப்ஸ்

பிலிப்ஸ்

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

இறைவன் இருக்கின்றானா?

குழல்வண்ணன்

ஓர் ஊரில் கோபால கிருஷ்ண பாகவதர் என்னும் கதா காலட்சேபம் செய்யும் பெரியவர் ஒருவர் இருந்தார். அவர் மிகவும் கடவுள் பக்தி கொண்டவர். ஒரு நாள் தம் ஊருக்குப் பக்கத்தில் உள்ள ஊரில் ஒரு மாலை அவர் 'பிரஹ்லாதன்' கதை செய்தார். பிரஹலாதனின் பக்தியைப் பற்றியும், அவன் தந்தை 'ஹிரண்ய கசிபு' செய்த கொடுமைகளைப் பற்றியும், அவன் கொண்ட பக்தியே அவனைக் காப்பாற்றி வந்ததையும், இறுதியில் 'ஹிரண்யன் நரசிம்ம மூர்த்தியால் வதம் செய்யப்பட்ட விதத்தையும் சுவைபடச் சொல்லி இறுதியில் எல்லாரும் கடவுளிடம் நம்பிக்கை கொண்டு பக்தியோடு இருந்தால் நல் வாழ்க்கை கிட்டும் என்றும் கூறினார்.

கதை முடிய இரவு பத்து மணி ஆயிற்று. கதை சொல்லிய அவருக்குப் பரிசாக அவ்வூர் மக்கள் ஒரு தங்க மோதிரத்தை அளித்தனர். அதைப் பெற்றுக் கொண்டு, தம் மனைவி உடல் நிலை சரியில்லாமல் இருந்ததாலும், நிலவொளி வீசிக் கொண்டிருந்ததாலும் தம் ஊருக்குத் தனியாக நடந்து புறப்பட்டார்.

அவ்வூரைச் சேர்ந்த கந்தன் என்ற இளைஞனும் அவர் சொன்ன கதையைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் எல்லாக் கெட்ட செயல்களையும் கொண்ட தீயவன். அவனுக்குக் கடவுளிடம் நம்பிக்கை இல்லை. அவன் பாகவதருக்குப் பரிசாக அளித்த மோதிரத்தை எப்படியாவது திருடிக் கொள்ள வேண்டும் என்று எண்ணினான்.

அவர் சொல்லும் வழி அவனுக்குத் தெரியும். ஆகவே அவர் புறப்படும் முன்பே தான் புறப்பட்டுச் சென்று வழியில் அவரை மடக்கி மிரட்டி அந்த மோதிரத்தைப் பறிக்க எண்ணினான்.


பாகவதர் தம் ஊருக்குச் செல்லும் வழியில் ஓர் ஆற்றைக் கடக்கவேண்டியிருந்தது. அதன் கரைகளில் தென்னந் தோப்புக்கள் அடர்ந்திருந்தன. அத் தோப்புக்களில் இருந்த மரங்களில் குலை குலையாகத் தேங்காய்கள் காய்த்துத் தொங்கிக் கொண்டு இருந்தன.

ஆற்றைக் கடக்குமுன் இருந்த தென்னந் தோப்பு ஒன்றில் கந்தன் ஒளிந்திருந்தான். பாகவதர் தோப்பினுள் நுழைந்ததும் தன் மறைவிடத்திலிருந்து கந்தன் வெளியே வந்தான். தன் கத்தியை அவர் நெஞ்சுக்கு நேரே நீட்டியவன், ''ஓய், பாகவதரே ! மரியாதையாக உன்னிடம் இருக்கும் மோதிரத்தை எடு!'' என்று மிரட்டினான்.

பாகவதர் பயப்படவில்லை. அவருக்குக் கந்தனைத் தெரியும். ஆகவே அவர் கந்தனைப் பார்த்து, ''கந்தா, நீ இப்படித் திருடிப் பிழைப்பது பாவம். கடவுள் தண்டிப்பார். ஆகவே; இவ்வாறு செய்வதை விட்டுவிடு'' என்றார்.

அதற்கு அவன், ''போதும் பாகவதரே ! உன் பிரசங்கத்தையெல்லாம் கடவுளை நம்பற முட்டாள் ஜனங்ககிட்டச் சொல்லிக்க. நம்மகிட்ட வேண்டாம். மரியாதையா மோதிரத்தைக் கொடு. கடவுளாம் கடவுள். எங்கே, உன் கடவுளை இங்கே வந்து உன்னைக் காப்பாத்தச் சொல்லு பார்க்கலாம்'' என்று மேலும் பாகவதரின் அருகே நெருங்கினான்.





அப்போது தூரத்தே யாரோ பேசிக் கொண்டே வரும் சத்தம் கேட்டது. கந்தன் உஷாரானான்.

அதற்குள் காற்று பலமாக வீசத் தொடங்கியது. ஆகவே, தென்னை மரங்கள் காற்றிலே ஆடத் தொடங்கின. பலமாகச் சத்தம் எழுந்தது.

கந்தன் உரக்கச் சிரித்தவாறே, ''பார்த்தியா பாகவதரே, உன் கடவுள் எனக்குத்தான் துணை செய்யறான். நீ எவ்வளவு பலமாகச் சத்தம் போட்டாலும் அங்கே வரவங்களுக்குக் காது கேட்காது தெரியுமா ?'' என்று கூறியவாறே அவர் விரலிலிருந்த மோதிரத்தைப் பறிக்கத் தொடங்கினான்.

பாகவதரோ வயதானவர். அவரால் கந்தனோடு போராட முடியவில்லை. ஆகவே அவர், ''கந்தா, நானே கழற்றித் தந்துவிடுகிறேன். இருந்தாலும் தன்னை நம்புகிறவனை அந்தக் கடவுள் ஒரு நாளும் கைவிடமாட்டார்'' என்று கூறியவாறே தன் விரலிலிருந்து மோதிரத்தைக் கழற்றிக் கந்தனிடம் நீட்டினார். கந்தன் அதனை வாங்கக் கையை நீட்டினான்.

அப்போது....

அவன் அருகிலிருந்த தென்னை மரத்திலிருந்து நன்கு முற்றிய பருத்த காய் ஒன்று தடாலென்று பலமாக வீசிய காற்றினால் அவன் தலை மேல் விழுந்தது. அதனால் அப்படியே அவன் மயக்கமடைந்து விழுந்து விட்டான்.

உடனே பாகவதர் அவன் மயக்கத்தைத் தெளிவிக்க முயற்சித்தார். முடியவில்லை. அப்போது தூரத்தில் பேசிக்கொண்டு வந்தவர்கள் அருகே வந்து கொண்டிருக்கும் சத்தம் கேட்டது. உடனே அவர் அவர்களிடம் ஓடிச்சென்று வேறு எதுவும் கூறாமல் அவர்களின் துணையோடு அவன் வீட்டுக்கு அவனை எடுத்துச் சென்று மருத்துவர் ஒருவரைக் கொண்டு அவனுக்குச் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்தார்.

மயக்கம் தெளிந்த கந்தன் தான் இருப்பது தன் வீடு என்றும், தன்னைக் காப்பாற்றி அழைத்து வந்தவர் பாகவதர்தான் என்றும் பிறர் கூற அறிந்தான். தான் அவரிடம் மோதிரம் திருட முயற்சித்ததை அவர்களிடம் பாகவதர் கூறவில்லை என்பதனையும் அவருக்குச் சரியான சமயத்தில் கடவுள் எவ்வாறு உதவியாக இருந்தார் என்பதனையும் அறிந்தான். அதன்பின் அவன் பாகவதரிடம் சென்று தன் செயலுக்கு மன்னிப்புக் கேட்டான். அன்று முதல் தீய செயல்களை விட்டு விட்டு, கடவுள் நம்பிக்கை கொண்டு உழைத்துப் பிழைக்கத் தொடங்கினான்.

தெரியுமா?



1076. இங்குள்ள பெண் வைத்துக் கொண்டிருக்கும் சங்கீதக் கருவியின் பெயர் என்ன தெரியுமா?

1077. வராஹ மிகிரர் என்ற புகழ்பெற்ற ஜோதிட நூல் வல்லுனர் வாழ்ந்தது எந்த மன்னருடைய காலத்தில்?

1078. ஜப்பானியர்கள் அரிசியிலிருந்து ஒருவகை மது தயாரிக்கிறார்கள் அதன் பெயர் என்ன?

1079. லண்டனில் உள்ள மெட்ரோ பாலிடன் போலீஸாரின் தலைமையகத்துக்கு என்ன பெயர் என்று தெரியுமா?

1080. அறுவைச் சிகிச்சையின்போது சர்ஜன்கள் மிகச் சிறிய ஒரு கத்தியைப் பயன் படுத்துவார்கள். பேனாவைப் போல அதைப் பிடித்துக் கொள்ள முடியும். இதன் பெயர் தெரியுமா?

1081. பாரிஸ் நகரில் புகழ்பெற்ற ஒரு நுழைவாயில் (Gateway) இருக்கிறது. இது யாருடைய நினைவாக எழுப்பப்பட்டதென்று தெரியுமா?

1082. பாரிஸ் நகரம் எந்த நதிக் கரையில் உள்ளதென்று தெரியுமா?

1083. பாரிஸில் உள்ள புகழ்பெற்ற சார்போன் (Sorbonne) சர்வகலாசாலை யாரால் எப்போது ஏற்படுத்தப்பட்டது?

1084. ஐஃபெல் கோபுரம் (டவர்) எப்போது எதற்காக எழுப்பப்பட்டது என்று தெரியுமா?

1085. ஆதாம் ஏவாள் — இவர்களுடைய பிள்ளைகளின் பெயர் என்ன என்று தெரியுமா?

1086. புகழ் பெற்ற சார்லஸ் டிக்கன்ஸ் ஒரு நிலையில் வேறு ஒரு புனை பெயரில் எழுதினர். அது என்ன?

1087. ஒரு கடற் பறவைக்குக் கோடையில் பளீரென்ற வண்ணமுடைய அலகு இருக்கும். மாரிக் காலத்தில் இந்த அலகை மூடிக் கொண்டிருக்கும் வண்ண உறை உதிர்ந்து, கீழே மங்கலான வண்ணத்தில் உள்ள அலகு தெரியும். இந்தப் பறவையின் பெயர் என்ன?

1088. பெரியம்மை நோயைத் தடுக்க ஒருவர் ஓர் ஒப்பற்ற முறையைக் கண்டார். அதன் பெயர் என்ன? அவர் யார்?

1089. மலேரியாவை வெற்றி கொள்ளத் தம் வாழ்நாளையே அர்ப்பணித்த அற்புத மனிதரின் பெயர் என்ன?

1090. இதய மாற்று ஆபரேஷன் செய்து புகழ்பெற்ற தென் ஆப்பிரிக்க டாக்டர் யார் என்று தெரியுமா?

1091. எக்ஸ்ரேயைத் தற்செயலாகக் கண்டுபிடித்த விஞ்ஞானி யார்?

1092. குளோரஃபாம் என்ற மருந்தைக் கண்டுபிடித்தார் ஒரு ஜெர்மன் கெமிஸ்ட். ஆனல் அதை மயக்க மருந்தாகப் பயன்படுத்தலாம் என்பதைக் கண்ட ஸ்காட்லாந்துக்காரர் யார்?

1093. கிரேக்க இதிகாசம் கடவுளர்களின் தலைவராக யாரைக் குறிக்கிறது?

1094. கிரேக்கக் கடவுளான அப்போலோவை உருவகப்படுத்தும்போது கையில் ஒரு வாத்தியம் இருப்பதாகக் காண்பிப்பார்கள். அந்த வாத்தியத்தின் பெயர் என்ன?

1095. நார்ஸ் கடவுளர்களில் இடிக்கு உரிய ஒரு கடவுளின் பெயரால் வாரத்தில் ஒரு நாள் வழங்கப்படுகிறது. அந்தப் பெயர் எது?

1096. பாம்புகளில் மிகப் பெரியது எது?

தெரியுமே!

விடைகள்: 1076. ஸாக்ஸபோன். 1077. இரண்டாம் சந்திரகுப்தரின் காலத்தில். இவருக்கு விக்ரமாதித்தர் என்ற பட்டப் பெயரும் உண்டு. காளிதாஸனும் இவர் காலத்தவரே. 1078. சாகே (Sake). 1079. ஸ்காட்லண்டு யார்டு. 1080. ஸ்கால்பெல் (Scalpel). 1081. தி ஆர்க் டி டிரையம்ஃப். வெற்றி வீரன். நெப்போலியனின் நினைவாக. 1082. ஸீன் நதிக் கரையில். 1083. பாரிஸ் சர்வகலாசாலையில் படிக்கும் ஏழை மாணவர்களுக்கான ஹாஸ்டலாக 1252ல் ராபர்ட் டி ஸார்போன் என்பவரால் தொடங்கப்பட்டது. பிறகு சர்வ கலாசாலையாக மாறியது. 1084. 1889ம் ஆண்டு நடைபெற்ற பாரிஸ் கண்காட்சிக்காக (எக்ஸிபிஷன்) உருவாக்கப்பட்டது. 1887-1889ல் கட்டி முடிக்கப்பட்டது. 1085. கெயின், ஏபெல். 1086. பாஸ் (Boz) என்ற பெயரில். 1087. பஃபின் (Puffin) என்ற பறவை. 1088. எட்வர்டு ஜென்னர் கண்ட முறைக்கு அம்மை குத்துதல் என்று பெயர். 1089. சர் ரோனால்டு ரோஸ். 1090. புரொபஸர் கிறிஸ்டியன் என். பர்னார்டு. 1091. வில் ஹெல்ம் கான்ராடு ரோண்ட்ஜென். 1092. ஸர் ஜேம்ஸ் எங் சிம்ப்ஸன் என்பவர். 1093. ஸீயஸ் (Zeus) என்பவரை. 1094. லயர் (Lyre). 1095. தார் (Thor) கடவுள். இதனை தர்ஸ்டே (வியாழன்). 1096. அனகோண்டா என்ற பாம்பு.

RAAS/B/156 TAM



12 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுடைய குழந்தைகள் தங்களது சேமிப்புக் கணக்கை தாமே நடத்தலாம்.

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: சதாசிவம்


சாகசத்துக்கு இதோ ஒரு டிக்கெட்!


இந்திரஜாலக் காமிக்குகள்—ஆயிரக்கணக்கான சிறுவர்களை மெய்சிலிர்க்க வைக்கும் மாதமிருமுறை வெளிவரும் பத்திரிகை—சிறுவர்கள் என்ன, பெரியவர்களையும் கூட கவர்ந்துள்ளது இது—ஃபாண்டம் என்ற இறவாத வேதாளத்தின் சாகசச் செயல்களைப் படித்து அனுபவியுங்கள். ஃபாண்டம், மண்ட்ரேகா, மற்றும் பலர் தீமையை எதிர்த்து புரியும் செயல்களில், சாகசம், தீரம், துடிப்பு, ஸஸ்பென்ஸ் எல்லாம் உள்ளன.

ஆங்கிலம், இந்தி, மராத்தி, குஜராத்தி, தமிழ், வங்காளம்—ஆகிய ஆறு மொழிகளில் பிரசுரிக்கப்படுகிறது. எந்தக் குழந்தையும் இந்திரஜாலக் காமிக்குகளைப் படிக்கத் தவறக்கூடாது.

இந்திரஜாலக் காமிக்ஸ்

டைம்ஸ் ஆப் இந்தியா வெளியீடு
டாக்டர் தாதாபாய் நௌரோஜி ரோடு
பம்பாய் - 400001







ஆக்பா கலர் பிலிம்களில், கலர் பிரிண்ட்களுக்கு என்று பிரத்தி
யேகமாகத் தயாரிக்கப்பட்ட *ஆக்பா கலர் CNS நெகடிவ்
பிலிம், மற்றும் தத்ரூபமான கலர் டிரான்ஸ்பரன்ஸிகளுக்கு
என்று தயாரிக்கப்பட்டுள்ள *ஆக்பா கலர் CT 18
பிலிம்களும் உள்ளன.

சுருள் பிலிமாகவும், மற்றும் 35 mm பிலிம்
களாகவும் இரு வகையிலும் கிடைக்கின்றன.
எளிய முறையில் புரிந்துகொண்டு,
செயலாற்றுவதற்கான விதிமுறைகள்
ஒவ்வொரு பெட்டியிலும் வைக்கப்பட்டுள்ளன.
இந்தியாவில் பிராஸஸ் செய்யப்படுகிறது.
விவரங்களுக்கு உங்கள் அருகிலுள்ள அங்கீகரிக்
கப்பட்ட ஆக்பா-கேவர்ட் டீலரை விசாரியுங்கள்:



ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஆக்பா - கேவர்ட் இந்தியா லிமிடெட்
பம்பாய் - புது டெல்லி - கல்கத்தா - சென்னை
® புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவர்ட்
ஆன்ட்வெர்ப்/லீவர்குஸன் ஆக்யோகின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்